வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 14.08.2021 சனிக்கிழமை | இதழ் : 253 | பக்கங்கள் : 16

# இலங்கையை உடனடியாக முடக்காவிடின் கொரோனா படுகொலையே அரங்கேறும்

## விசேட மருத்துவ நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 14

இலங்கையை உடன் முடக்கிக் கொரோனா மரணங்களைத் தடுக்கத் தவறும் பட்சத்தில் நாட்டில் கொரோனாப் படுகொலையே இடம்பெறும் என்று சமூக மருத்துவத்துறை விசேட நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் இப்போது தீர்மானம் எடுக்காது பொறுப்பை தட்டிக்கழிப்பதும், அதன் மூலமாக மக்களைக் காப்பாற்றாது போவதும் ஒரு விதத்தில் படுகொலைக்குச் சமமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவை விட 10 மடங்கு அதிகமாக இலங்கையில் மரணங்கள்

15



வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்றம் நேற்று இடம்பெற்ற போது...

# நாடு முடக்கப்படாது

- மாகாணங்களிடையே முழு தடை
- பொது போக்குவரத்து முடக்கம்
- செப். 15 முதல் தடுப்பூசி அட்டை அவசியம்



கொழும்பு, ஓகஸ்ட் 14

நாட்டில் கொரோனாவின் தீவிர பரவல் நிலையையடுத்து நேற்று நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கிடையிலான பயணம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், நாடு முடக்கப்படாது என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

15

## 3,142 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 14

நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 142 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்

15

கொரோனா அச்சுறுத்தல்:

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் உற்சவத்துக்கு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 14

நாட்டில் கொரோனா தொற்று நோய் அபாய நிலை நிலவும் சூழலில் ஆரம்பமாகவுள்ள ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

15

## யாழ்ப்பாணத்தில் 64 பேர் உட்பட வடக்கில் நேற்று 97 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 64 தொற்றாளர்கள் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 97 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய

15

## நாட்டை மூடிவைப்பதன் மூலமே மக்களை வாழவைக்க முடியும்

### சுட்டிக்காட்டுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 13

"நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைக்கு மத்தியில் அரசாங்கம் தீர்மானம் எடுக்க வேண்டியது நாட்டின் பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற இரண்டு குறித்து என

15

# கொரோனா பிடிக்குள் நாடு!

## 2ஆவது நாளாக 150க்கும் அதிகமான கோவிட் மரணங்கள் பதிவாகின

கொழும்பு, ஓக..14

இலங்கையில் கொரோனா மரணங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் 2ஆவது நாளாக 155 க்கு மேற்பட்ட கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இலங்கையில் நேற்று முன்தினம் (ஓகஸ்ட்-12) மேலும் 155 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் உறுதிப் படுத்தியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம்

15

## பிரான்ஸ் இரட்டை கொலை தாயும் மகளும் அடையாளம்!

### உரும்பிராயை சேர்ந்தவர்கள் எனத் தகவல்



பாரிஸ், ஓக. 14

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த செவ்வாய்கிழமை காலை இடம்பெற்ற சம்பவத்தில் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக் கொல்லப்பட்ட தாயும், மகளும் யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது…!

நேற்று வடக்கு மாகாணத்தின் அதி உயர் அதிகாரிகளில் ஒருவர் தொடர்புகொண்டார்.

“என்ன கதைகளைக் காணோமே” என்றார்.

இன்று இந்தப் பத்தியில் ஊர்க்குருவியார், இரண்டு கற்பனை கதைகளை மட்டும் எழுதவிருக்கிறார்.

ஒரு விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் பேசிக்கொண்டனர்.

“மிகவும் போரடிக்கிறது. நமக்குள் ஏதாவது போட்டி வைத்து நேரத்தை கடத்துவோமா..?” என்று கேட்டார் ஒருவர்.

பக்கத்தில் இருந்தவருக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை.

“கொஞ்சம் கேளுங்கள், போட்டியில் நான் தோற்று நீங்கள் வெற்றி பெற்றால், நான் உங்களுக்கு 500 ரூபாய் தருகிறேன்.! மாறாக நான் வெற்றி பெற்று நீங்கள் தோற்றால் 500 ரூபாய் நீங்கள் எனக்கு தரவேண்டும்..! போட்டிக்கு இப்போது சம்மதமா..?”, என்றார் மீண்டும்.

“நான்தான் போட்டிக்கு வரவில்லை என்று சொன்னேனே. ஏன் என்னை தொந்தரவு செய்கிறீர்கள்? நான் தூங்கப் போகிறேன்.!”, என்றார் மற்றவர்.

அவர் விடுவதாக இல்லை.

“சரி.. இப்படி வைத்து கொள்வோம். போட்டியில் நீங்கள் வெற்றி பெற்று நான் தோற்றால், 500 ரூபாய் உங்களுக்கு நான் தருகிறேன். மாறாக நான் வெற்றி பெற்று நீங்கள் தோற்றால், 50 ரூபாய் நீங்கள் எனக்கு கொடுத்தால் போதும். இப்போது சம்மதமா?” என்று கேட்டார்.

அதற்கு மற்றவர், “சரி சம்மதம்!” என்றார்.

முதலில் கேள்வியை கேட்டார்.

“நிலவுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

“தெரியவில்லை. 50 ரூபாயை பிடியுங்கள்.”

இப்போது தோற்றுப்போனவர் முறை. அவர் கேட்டார்,

“ஒரு விலங்கு மலை ஏறிச் செல்லும் போது மூன்று கால்கள் இருக்கும். பின் மலையை விட்டு கீழே இறங்கும் போது நான்கு கால்கள் இருக்கும். அது என்ன விலங்கு?

நீண்ட நேரம் யோசித்து விட்டு, “தெரியவில்லை. 500 ரூபாயை பிடியுங்கள்.!” என்றார்.

இவன், 500 ரூபாயை வாங்கி பொக்கெட்டில் வைத்து விட்டு தூங்க ஆரம்பித்தான்..!

“அது எந்த விலங்கு என்று சொல்லவில்லையே” என்றார்.

அதற்கு மற்றவர், ‘தெரியவில்லை. 50 ரூபாயை பிடியுங்கள்!’ என்றார்.

இது அடுத்த கதை.

அரசாங்கத்திற்கும், கூட்டமைப்பிற்குமிடையே பேச்சு ஆரம்பமாகியிருந்தது. முதல்நாள் கூட்டத்தில் அரச தரப்பில் இருந்த பேராசிரியர், “உங்களுக்கு தீர்வாக என்ன வேண்டும் என்பதை முதலில் சொல்லுங்கள்”, என்றார்.

அதற்கு, கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொண்ட தலைவர் சொன்னார், “நாங்கள் என்ன வேண்டும் என்று கேட்டால் தரவா போகிறீர்கள். முதலில் நீங்கள் அதிக பட்சம் என்ன தருவீர்கள் என்பதைச் சொல்லுங்கள்”, என்று.

அதற்கு அரச தரப்பின் பேராசிரியர் சொன்னார், “நாங்கள் தருவதை நீங்கள் வாங்கிக்கொண்டாலும் உங்கள் இனத்திலுள்ள மற்றக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளவா போகின்றன. எனவே, நாங்கள் என்ன தந்தாலும் இந்தப் பிரச்னை தீரப்போவதில்லைத்தானே”, என்று.

“அப்போ எதற்கு இந்தப் பேச்சு?” என்று கூட்டமைப்பினர் திரும்பிக் கேட்க, “அடுத்த தேர்தல்வரை பேசிக்கொண்டிருப்போம், நீங்கள் போய் உங்கள் மக்களுக்கு சொல்லலாம், அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று. நாங்கள் போய் எங்கள் மக்களுக்கு சொல்லலாம், அவர்கள் நாட்டைப் பிரிக்கக் கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்க மறுத்துவிட்டோம். இப்போது அவர்கள் எதிர்க்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சி நாட்டைப் பிரிக்க சம்மதித்துவிட்டது என்று பிரசாரம் செய்ய வசதியாக இருக்கும். இரண்டு தரப்பினருக்கும் நல்லதுதானே” என்று!

(யாவும் கற்பனையே)

**- ஊர்க்குருவி**

# த. தே. கூட்டமைப்பின் வியூகத்தால் மக்கள் குடிசைகளையும் இழந்தனர்

## ஈ.பி.டி.பி. கட்சி குற்றச்சாட்டு

வடமராட்சி, ஓக. 14

ஜனாதிபதி தேர்தல் கால வெற்றிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனையை ஐக்கிய தேசியக் கட்சி நடைமுறைப் படுத்தியதாலேயே வட பகுதி மக்கள் தாம் வாழ்ந்த குடிசைகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகினர் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, அம்பனில் மீனவ குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போதே இதனை கூறினார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கின் வசந்தம், இந்திய வீட்டு திட்டம், உலக வங்கியின் உதவியுடனான திட்டங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஊடான திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் செயல்படுத்தினார்.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல திட்டங்கள் கைவிடப் பட்டன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அன்றைய நல்லாட்சி அரசின் அமைச்சராக இருந்த சஜித் பிதேமதாஸவை ஜனாதிபதி ஆக்க வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை அபகரிக்க கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தலா 30 கோடி ரூபாயை பெற்று ஐக்கிய தேசிய கட்சிக்கு வகுத்து கொடுத்த வியூகமே தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடான வீட்டு திட்டம்.

வீடற்ற வறிய மக்களுக்கு முற்பணம் தரப்படும் என வாக்குறுதியளித்து தொடக்கி வைக்கப்பட்ட திட்டங்களால் மக்கள் குடியிருந்த குடிசைகளையும் இழந்து அத்திவாரம் இட்ட நிலையில் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். நிதியும் கிடைக்காமல் தொடங்கிய வீடமைப்புக்களை முடிக்க முடியாமல் அல்லல்படுகின்றனர்.

இதற்கு கூட்டமைப்பினரே பொறுப்பாளிகள் - என்றார். (02)

## கைக்குண்டுடன் இளைஞர் கைது!

மட்டக்களப்பு, ஓக. 14

கைக்குண்டுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விநாயகபுரம் அம்பாறையை சேர்ந்த வியாஜராசா பிரசாந்தன் எனும் 34 வயது மதிக்கத்தக்க இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வரும்போதே நேற்றுக் காலை விசேட அதிரடிப் படையினர் நடத்திய சோதனை நடவடிக்கையில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும், அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார். (ஐ)

## மங்களவுக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 14

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் தற்சமயம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

**கல்வி TV CHANNEL-1**

**14.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**கல்வி TV CHANNEL - 2**

**14.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
14.08.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்கா பற்றிய கதைகள்

அமெரிக்காவுக்கு திருகோணமலையில் 3,000 ஏக்கர் காணியை வழங்கப்போவதாக ஒரு கதை கூறப்படுகின்றது. கடும்போக்குவாத சிங்கள இனவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தை சேர்ந்தவர்களே இவ்வாறான கதைகளை புனைகின்றனர். மைத்திரி - ரணில் கூட்டரசாங்கம் ஆட்சியில் இருந்தபோதும் 2017இல் இவ்வாறான ஒரு கதை சொல்லப்பட்டது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் இதனை ஒரு வதந்தி என்று குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் இந்தக் கதை காணாமல் போய்விட்டது. உண்மையில், அப்போது நடந்ததோ வேறு.

மேற்கின் நண்பராகக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவிற்கு வழங்கியிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கை இலங்கைக்குள் சீனா மேலும் காலூன்றுவதற்கான வாய்ப்பை வழங்கியது. ஆனால், மறுபுறமோ அமெரிக்காவின் மிலேனியம் ஒத்துழைப்பு உடன்பாட்டை ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்க முடியவில்லை. ‘சோபா’ உடன்பாட்டை முன்கொண்டு செல்ல முடியவில்லை.

இந்த நிலையில்தான் ஆட்சி மீண்டும் ராஜபக்ஷக்கள் வசமாகியது. இப்போது, திருகோணமலை விவகாரத்தை, சில சிங்கள கடும்போக்கு தரப்புகள் மீண்டும் கையில் எடுத்திருக்கின்றன. இவ்வாறான சிங்கள கடும்போக்கு தரப்புகள் மறுபுறமாக தமிழ் மக்களுக்கு ஓரளவு வாய்ப்பாக இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட இல்லாமலாக்க வேண்டும் என்று வாதிட்டுவரும் குழுக்களாகும். எனவே, அவ்வாறான குழுக்களின் கருத்துக்களில் எந்தளவு உண்மை இருக்க முடியும்?

திருகோணமலையில் அமெரிக்கா ஆர்வம் கொண்டிருக்கின்றது என்பது மிகவும் பழைய கதை. அமெரிக்காவுக்கும் சோவியத்துக்குமான பனிப் போர் காலத்தில், வாஷிங்டன் திருகோணமலை துறைமுகத்தின்மீது அக்கறை கொண்டிருப்பதான ஒரு பார்வை இருந்தது. குறிப்பாக, அப்போது சோவியத் அணியில் இணைந்திருந்த இந்தியாவிடம் அவ்வாறானதொரு பார்வை இருந்தது. குறிப்பாக 1977இல் அதிகாரத்திற்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, மேற்குலகுடன் நெருங்கிச் செயல்படும் கொள்கை நிலைப்பாட்டை எடுத்திருந்தார். இந்தக் காலத்தில் திருகோணமலையில் அமெரிக்கா கடற்படை தளமொன்றை நிறுவுவதற்கு முயற்சிப்பதான கதையொன்று இருந்தது. இந்த அடிப்படையில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், திருகோணமலை மற்றும் ஏனைய துறைமுகங்களை இராணுவ தேவைகளுக்காக ஏனைய நாடுகளுக்கு வழங்கக்கூடாது என்னும் விடயம் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், இன்று உலக நிலைமைகள் தலைகீழாகிவிட்டன. அப்போது எதிர் நிலையிலிருந்த இந்தியாவும் அமெரிக்காவும் இப்போது நெருங்கிய கூட்டாளிகள். இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பில் அமெரிக்காவும் இந்தியாவும் இப்போது ஒரு நேர் கோட்டில் பயணிக்கின்றன. இந்த நிலையில் அமெரிக்கா இலங்கைத் தீவில் எந்த விடயங்களை செய்வதாயினும் இந்தியாவின் கடைக்கண் பார்வையில்லாமல் செய்யாது.

மேலும், திருகோணமலையில் அமெரிக்கா ஒரு கடற்படை தளத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இதனை இரகசியமாகவும் செய்ய முடியாது. ஆனால், பஸில் ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையை பெற்றவராக இருப்பதால் இவ்வாறான பிரசாரங்களை, சிங்கள கடும்போக்குவாதிகள் செய்ய முற்படலாம். ஆனால், இதே தரப்பினர் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் வாய் திறக்கமால் இருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக பொறுப்பேற்ற பின்னணியில்தான், இவ்வாறான கதைகள் பல எட்டிப்பார்க்கத் தொடங்கின. இவ்வாறான பிரசாரங்கள், அடிப்படையில் அமெரிக்காவுக்கு எதிரான பிரசாரங்களாகும். இவ்வாறான பிரசாரங்களுக்கு தமிழ் மக்கள் எடுபட்டுவிடக்கூடாது. மேலும், அமெரிக்கா ஓர் உலகளாவிய சக்தி. தெற்காசியாவில் படைத் தளங்களை நிர்மாணிக்க வேண்டுமாயின் அமெரிக்காவால் அதனை பல்வேறு வழிகளில் செய்ய முடியும்.

# வணிக நிறுவனங்கள் மீது இறுகும் கட்டுப்பாடுகள்

## சீனாவின் ஐந்தாண்டு திட்டத்தில் புதிய பொருளாதார கோட்பாடு

சீனாவில் வணிக நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படும் என்ற தகவலை தாங்கி வந்துள்ளது புதிதாக வெளியிடப்பட்ட சீனாவின் ஐந்தாண்டு திட்டம். தேசிய பாதுகாப்பு, தொழில்நுட்பம், ஏகபோக நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான புதிய விதிகள் அறிமுகம் செய்யப்படும் என்று உலகின் இரண்டாவது பொருளாதார சக்திமிக்க நாடான சீனா கூறியுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் கல்வித் துறையை குறிவைத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்த ஐந்தாண்டு திட்டம் வந்துள்ளது. சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடி வரும் நிலையில், இந்த ஐந்தாண்டு திட்ட ஆவணம், சீன குடியரசை தோற்றுவித்தவரான மவோவின் பெயரை குறிப்பிட்டுள்ளது.



2025ஆம் ஆண்டு வரையிலான காலத்தை பேசும் இந்த 10 அம்ச திட்டத்தை சீனாவின் அரசு கவுன்சிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவும் புதன்கிழமை வெளியிட்டன. அறிவியல், தொழில்நுட்ப புத்தாக்கம், பண்பாடு, கல்வி ஆகிய துறைகள் தொடர் பான சட்டங்கள் பலப்படுத்தப்படும் என்கி றது அந்த திட்டம். ஏகபோக நிறுவனங்கள், வெளிநாடு தொடர்பான சட்டம் ஆகியவற்றை கட்டுப்படுத்தவும் சீன அரசு உத்தேசித்திருப்பதாக அந்தத் திட்டம் சொல்கிறது.

இணைய நிதித்துறை, செயற்கை நுண்ணறிவு, பிக் டேட்டா, கிளவுட் கம்ப்யூட்டிங் உள்ளிட்டவை தொடர்பான சீனாவின் டிஜிற்றல் பொருளாதாரம் குறித்த நெறிமுறைகள் மறுபரிசீலனைக்கு உள்ளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் மீதான சீனாவின் நடவடிக்கை பல ஆண்டுகளுக்கு நீடிக்கும் அதிகரிக்கும் என்ற கவலையை இந்த அறிவிப்புகள் தோற்றுவித்துள்ளன. முதலீட்டாளர்களின் கவலைகள் அதிகரித்ததை அடுத்து, அமெரிக்கா, ஹொங்கொங், சீனா ஆகிய நாடுகளின் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ள பல சீன நிறுவனங்களின் பங்கு விலை கடுமையாக சரிந்தது. ஏற்கெனவே நாட்டின் மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள், இதர பல வணிக நிறுவனங்கள் மீது ஏகபோக எதிர்ப்பு விசாரணையை முடுக்கிவிட்டுள்ளது சீனா.

சீன பெருநிறுவனமான அலிபாபா மீது நடத்தப்பட்ட விசாரணை, அந்நிறுவனம் சந்தையில் பல ஆண்டுகளாக தனக்கு உள்ள ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்திக் கொண்டது என்று கண்டுபிடித்தது. இதையடுத்து விதிக்கப்பட்ட 280 கோடி டொலர் அபராதத்தை கடந்த ஏப்ரல் மாதம் அலிபாபா ஏற்றுக்கொண்டது.


பிரத்தியேக இசை உரிம ஒப்பந்தங்களை முடித்துக் கொள்ளும்படி கடந்த மாதம் டென்சென்ட் நிறுவனத்துக்கு சொல்லப்பட்டது. குவாய்ஷோ, டென்சென்டின் மெசேஜ் ரூல் QQ, அலிபாபாவினஅ டௌபௌ, வெய்போ போன்ற நாட்டின் பெரிய ஒன்லைன் தளங்களில் இருந்து பொருத்தமற்ற, குழந்தைகள் தொடர்பான உள்ளடக்கங்களை நீக்கும்படி ஜூலையில் உத்தரவிடப்பட்டது.

தனிப்பட்ட ஆசிரியர்கள் வழங்கும், ரியூஷன் சேவைகள் கடும் பரிசீலனைக்கு உள்ளாகும் என்று சீன அதிகாரிகள் இந்த வாரம் அறிவித்தனர். சமீபத்திய சோதனையில் விதிகளை மீறி, உரிமம் இல்லாமல் ரியூஷன் சேவை வழங்கியதாக ஒரு நபருக்கும், 6 நிறுவனங்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

சீனாவில், பள்ளி நேரத்துக்குப் பிந்திய ரியூஷன் சேவை வழங்கும் நிறுவனங்களின் ஒட்டுமொத்த மதிப்பு 120 பில்லியன் டொலராகும். கடந்த மாதம் சீன அரசு வெளியிட்ட சீர்திருத்தத்தின்படி இந்த நிறுவனங்கள் இலாபம் சாரா நிறுவனங்கள் என்று பதிவு செய்துகொள்ளவேண்டும். இந்த நிறுவனங்களில் வெளிநாட்டு முதலீடுகள் தடை செய்யப்படுகிறது. பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் இந்த ரியூஷன் சேவைகளில் முதலீடு செய்யக்கூடாது. இந்த ரியூஷன் நிறுவனங்கள் பங்கு மூலம் நிதி திரட்டக்கூடாது என்கிறது புதிய கட்டுப்பாடு.

- பி.பி.சி.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பலகாலமாக மனதில் இருந்த திட்டம் வெற்றி பெறும் நாள். நண்பர்களின் ஆதரவு கிட்டும். எதிர்க் கருத்துடையோர் மனம் மாறுவர். ஏற்ற, இறக்கமான சூழ்நிலைகள் இனி மாறும்.

**இடபம்**
இனிய அனுபவம் கிடைக்கும். நிதி நிலை மேம்படும். எதிர்பாராத திருப்பம் ஏற்படும். தொழிலில் புதிய மாற்றம் உண்டு. வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்

**மிதுனம்**
நட்பு வட்டம் விரிவடையும். பல நாள் உறுத்தல் தீரும். நீங்கள் எடுத்த முயற்சி ஒன்று நல்ல பலன் தரும். காலை நேரத்திலேயே பொருள் வரவு உண்டு. மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**
செல்வாக்கு மிக்க ஒருவரின் சந்திப்பைத் தவிர்க்கப் பாருங்கள். பணத்தைப் பெருக்குவதில் நாட்டம் அதிகரிக்கும் நாள். காலையில் வரும் செய்திகள் உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும்.

**சிம்மம்**
முக்கியமான நபர் ஒருவரை சந்திப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். தன்னம்பிக்கையோடு செயல்பட்டு தடைகளை அகற்றி முன்னேறுவீர்கள். குடும்பத்தில் முன்பு ஏற்பட்ட குழப்பங்கள் தீரும்.

**கன்னி**
விட்டுப்போன வியாபாரப் பேச்சு மீண்டும் தொடரலாம். வருமானம் பற்றிய கவலை தீரும். சந்தித்தவர்களால் சந்தோஷம் கிட்டும் கனவுகளை நனவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் ஒருவருக்குத் திருமண முயற்சி வெற்றி பெறும். யோகமான நாள். நினைத்ததைச் செய்து முடிப்பீர்கள். அதிகாரிகள் அனுசரணையுடன் நடந்து கொள்வார்கள்.

**விருட்சிகம்**
குடும்ப விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வரலாம். சச்சரவுகள் அகன்று சமாதானம் ஏற்பட்டு நிம்மதி பெறுவீர்கள். மனதில் தெளிவு பிறக்கும். எதிரிகள் விலகுவர்.

**தனுசு**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். உடல் நலம் சீராக இருக்கும். யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். செலவு அதிகரிக்கலாம். மன அமைதி குறையாமல் இருக்க அனுசரித்து செல்வது நல்லது.

**மகரம்**
உங்களது வழிபாட்டு முறைகளை மாற்ற வேண்டாம். நிம்மதி கூடும். மாறுதல்கள் இன்றி வழக்கப்படியான நாள். விரயங்கள் சற்றே கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
வீடு மாற்றம் பற்றி இப்போதைக்கு திட்டம் வேண்டாம். அலைச்சல் அதிகரிக்கலாம். பணியில் கவனக்குறைவு வேண்டாம். பணியாளர்கள் யோசித்து செயல்படுவது மிகவும் நல்லது.

**மீனம்**
திறமைகளை வெளிப்படுத்த தவற வேண்டாம். புதிய வாய்ப்பு வரும். பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்க நேரிடும். அதிர்ஷ்ட வாய்ப்பு ஒன்று உங்களைத் தடிவரும்.

# தமிழக பட்ஜெட் தொடர் தொடங்கியது அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு

சென்னை, ஓக. 14

தமிழக சட்டமன்றத்தில் நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் நேற்று பட்ஜெட்டை தாக்கல் செய்தார். பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இதனைப் புறக்கணித்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பின் தி.மு.க. அரசின் முதல் பட்ஜெட்டாகவும், தி.மு.க. தலைவர் ஸ்டாலின் முதல்வராக பதவியேற்று அவரின் அரசின் முதல் பட்ஜெட்டாகவும், தமிழ்நாட்டின் முதல் காகிதமில்லா பட்ஜெட் ஆகவும் இந்த பட்ஜெட் நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜனால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பட்ஜெட் உரைக்காக காலை பத்து மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் சட்டமன்றம் கூடியது. நிதியமைச்சர் பட்ஜெட் தாக்கல் செய்ய எழுந்திருக்கும்போதே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து சில பிரச்னைகளை வலியுறுத்தி



பேச அனுமதிக்குமாறு குரல் எழுப்பினார்கள். ஆனால், சபாநாயகர் அப்பாவு பட்ஜெட் தாக்கல் செய்ய இருப்பதால் உங்களுக்கு பிறகு வாய்ப்பளிக்கப்படும் என்று கூறினார். இதை ஏற்காமல் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

வெளிநடப்புக்குப் பின் வெளியே செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் முதல்வரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, “சட்டமன்றத் தேர்தலில் 505 க்கும் மேற்பட்ட நிறைவேற்றப்பட முடியாத வாக்குறுதிகளை சொன்னார் ஸ்டாலின்.

என் முதல் கையெழுத்து நீட் தேர்வை ஒழிக்கும் கையெழுத்து என்று ஸ்டாலின் சொன்னார். ஆனால், ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் ஆகியும் மாணவர்களிடம் இந்த விடியாத அரசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது” என்றார்.

# மேகதாது திட்டத்தை தடுப்பதற்கு தமிழகத்திற்கு அதிகாரம் இல்லை

## கர்நாடக எதிர்க்கட்சித் தலைவர் அறிவிப்பு

பெங்களூர், ஓக. 14

மேகதாது திட்டத்தை தடுக்க தமிழகத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் சித்தராமையா நேற்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

“நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிறது. இந்த நேரத்தில் கடந்த 74 ஆண்டுகள் வரலாற்றை சற்று திரும்பி பார்க்க வேண்டும். நாட்டில் முக்கியமான நாட்களை நாம், சமூக - பொருளாதார மாற்றங்



களை ஏற்படுத்த உறுதிமொழி ஏற்க வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டாடுகிறோம்.

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதிலும், வெள்ள நிவாரண பணிகளை மேற்கொள்வதிலும் இந்த அரசு தோல்வி அடைந்துவிட்டது.

கொரோனாவால் நாட்டில் 50 இலட்சம் பேர் இறந்திருப்பார்கள். கர்நாடகத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சமாக இருக்கும். ஆனால், மாநில அரசு இறப்புகளை குறைத்து காட்டுகிறது.

மேகதாது திட்டம் கர்நாடகத்தின் உரிமை. அதை தடுக்கும் அதிகாரம் தமிழ்நாட்டிற்கோ அல்லது கேரளாவுக்கோ இல்லை. கர்நாடகத்தின் நலன்களில் அக்கறை இருந்தால் சி.டி.ரவி மேகதாது திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியை பெற்று தர வேண்டும்“ என சித்தராமையா கூறினார்.

# போராட்டங்களில் பங்கேற்பதற்காக தமிழக விவசாயிகள் டில்லி விரைவு

சென்னைஇ ஓக. 14

வேளாண் சட்டங்களை திரும்ப பெற வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தி புதுடில்லியில் விவசாயிகள் கடந்த 8 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இதற்கு ஆதரவாக சென்னையிலிருந்து ரயில் மூலம் புறப்பட்டு செல்லும் தமிழக விவசாயிகளை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வழி அனுப்பி வைத்தது. இதற்கான நிகழ்ச்சி சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தின் நுழைவு வாயில் அருகே நேற்று முன்தினம் நடந்தது.

வழியனுப்பும் நிகழ்ச்சியில் முத்தரசன் பேசுகையில், “வேளாண் சட்டங்களை மத்திய அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும். அப்படி




திரும்ப பெறாவிட்டால், மோடி அரசாங்கத்தை இந்த நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். மத்திய அரசு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருதாமல், கார்ப் பரேட் கம்பெனி முதலாளிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறது.

இந்த நிலை மாறவேண்டும். வேளாண் சட்டங்களை நீக்கும் வரை எங்கள் போராட்டம் ஓயாது. இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் இந்த போராட்டம் விரிவடைந்து அடுத்தக்கட்ட எல்லைகளை கடக்கும்“ என்றார்.




# நல்லூர் கந்தன் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 14

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாட்டில் நடைமுறையில் உள்ள கோவிட் -19 நோய்த் தொற்று சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய சிவாச்சாரியார்கள் மற்றும் தொண்டர்கள் மட்டும் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து 25 நாள்களும் ஆலய வழிபாடுகளைக் கொண்டு செல்வர்.

உள்வீதியில் மட்டுமே திருவிழாக்களை நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீட்டிலிருந்தே நல்லூர்க் கந்தனின் திருவிழாவை நேரலையில் தரிசிக்க ஆலய தர்மகர்த்தாவினால் நேரலை ஒளிபரப்பு சமூக ஊடகங்களில் காண்பிக்கப்படுகிறது.

நல்லூர் ஆலய முன்பாக பருத்தித்துறை வீதியில் பக்தர்கள் ஒன்றுகூடி நல்லூர்க் கந்தனை தரிசித்தனர்.

நல்லூர் ஆலய முன்வாசலில் பொலிஸாரின் பேருந்து நிறுத்தப்பட்ட நிலையில் அதற்கு அடியவர்களினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதனால் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தின் பெருவிழா தொடர்ந்து 25 நாள்கள் இடம்பெறவுள்ளது. (அ-03)

# 5 மாதங்களில் 18,000 இலங்கையர் கொரோனாவால் இறக்கும் ஆபத்து

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஒக.14

**இலங்கையில் கோவிட்-19 தொற்று நோய் நெருக்கடி கட்டுப்பாடின்றி தற்போதுள்ள போக்கில் தொடருமானால் அடுத்த 5 மாதங்களில் 18,000 பேர் உயிரிழக்க நேரும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**

விசேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் அதிக உயிரிழப்புக்களைத் தவிர்த்து இலங்கையர்களைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளையும் இந்த அறிக்கையில் உலக சுகாதார அமைப்பு முன்வைத்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குதல், மாகாணப் பயணக் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக மாவட்ட ரீதியில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல், குறுகிய காலத்துக்கு ஊரடங்கு உத்தரவு விதித்தல், அனைத்து பொது நிகழ்வுகளையும் மூன்று வாரங்களுக்குத் தடை செய்தல், பொதுக் கூட்டங்களை தடை செய்தல், சுகாதாரப் பணியாளர்களைப் பாதுகாத்தல், பயனுள்ள தகவல் தொடர்புத் திட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு கொவிட் 19 தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டல், இறப்பு தொடர்பான சரியான புள்ளி விவரங்கள் வெளியிடுதல் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விரைவில் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட பரிந்துரைகள் அதில் அடங்குகின்றன.

இந்த அறிக்கை உலக சுகாதார அமைப்பு மற்றும் 30 இலங்கை மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் தொகுக்கப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர்கள் பாலித அபயக்கோன், நிஹால் அபேசிங்க, ராஜீவ் டி சில்வா, லக்குமாரி பெர்னாண்டோ, பத்மா குணரத்ன மற்றும் ஆனந்த விஜேவிக்ரமா ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

பேராசிரியர்கள் அசித டி சில்வா, ராஜீவ் டி சில்வா, சரோஜ் ஜெயசிங்க, இந்திக கருணாதிலக, நீலிகா மாளவிகே, காமினி மெண்டிஸ், மாலிக் பீரிஸ் மற்றும் மஞ்சு வீரசிங்க ஆகியோரும் இந்த அறிக்கையைத் தயாரித்த குழுவில் உள்ளடங்கியுள்ளனர்.

# மாகாண எல்லைகளில் களமிறங்கிய முப்படை

கொழும்பு, ஒக. 14

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண எல்லைகளில் பொலிஸாருக்கு மேலதிகமாக முப்படையினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் ஒத்துழைப்புக்கு முப்படையினர் தேவை என கருதப்படும் இடங்களில் முப்படையினர் நேற்றுமுன் தினம் முதல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமைக்கு மத்தியில், மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை மீண்டும் கடுமையாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# நல்லூர் கந்தன் ஆலய சூழலில் பொதுமக்கள் - பொலிஸ் முறுகல்

யாழ்ப்பாணம், ஒக. 14

நல்லூர் ஆலய வளாகத்தில் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமான நிலையில் நல்லூர் ஆலயத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டோர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர்.

நல்லூர் ஆலய முன்வாசலில் கோயில் நிர்வாகத்தினரின் உத்தரவில் பொலிஸாரின் பஸ் நிறுத்தப்பட்டது. பொதுமக்கள் கொடியேற்ற நிகழ்வை பார்க்காதவாறு தடை செய்யப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து பொதுமக்கள் வீதியில் அமர்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ-03)

# பஸில்,ரணில், ரத்னதேரர் ஆகியோரின் பாராளுமன்ற வருகை சட்டவிரோதம்!

கொழும்பு, ஒக. 14

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அத்துரலிய ரத்னதேரர் ஆகியோரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அரசமைப்புக்கு விரோதமானது என சிரேஷ்ட வழிக்கறிஞரும் பொது நல ஆர்வலருமான நாகானந்த கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இவர்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க உத்தரவிடக் கோரி நீதிமன்றத்தை நாடவுள்ளாரெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜையாக இருந்தார். அவர் தேர்தலில் போட்டியிட்டதும் அரசமைப்புக்கு விரோதமானது எனவும் நாகானந்த கொடித்துவக்கு மேலும் கூறினார்.

# 11 பேரை கடத்தி காணாமலாக்கிய குற்றச்சாட்டிலிருந்து வசந்த கரன்னகொடவை விடுவிக்கும் முடிவுக்கு எதிர்ப்பு!

கொழும்பு, ஒக. 14

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் 2008 -2009 ஆண்டு காலப் பகுதியில் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்தி காணாமல் போகச் செய்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை நீக்கவேண்டாமென காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த 13 வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசரின் ஆலோசனைக்கு அமைய, மூன்று பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் குற்றப்பத்திரிகை மீதான விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

667 குற்றச்சாட்டுகள், 126 சாட்சிகள் மற்றும் 64 வழக்குக் கோப்புகளுடன், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த குமார ஜயதேவ கரன்னகொடவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில்இந்த வழக்கை தொடர்ந்து கொண்டு நடத்தமுடியாது என சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். சம்பா ஜானகிராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க உள்ளிட்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஜனக பண்டார இதனை தெரிவித்தார்.

கஸ்தூரி ஆராச்சிலாகே ஜோன் ரீட், அந்தனி கஸ்தூரி ஆராச்சி, ராஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், மொஹமட் சஜித், திலகேஸ்வரம் ராமலிங்கம், ஜமால்டின் டிலான், அமலன் லியோன், ரோஷன் லியோன், கனகராஜா ஜெகன் மற்றும் மொஹமட் அலி அன்வர் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களை விடுவிக்க கடற்படை அதிகாரிகள் அவர்களது பெற்றோரிடம் கப்பம் பெற்றமை விசாரணையில் தெரியவந்தது. குற்றப்புலனாய்வுப் பிரிவின் தகவல்களுக்கு அமைய கடத்தப்பட்டவர்களில் பலர் கொழும்பிலும் ஏனையவர்கள் கடற்படையின் திருகோணமலை கன்சைட் முகாமிலும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளாக இருந்த லெப்டினண்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க, கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான லெப்டினண்ட் கொமாண்டர் டீ.கே.பி. தஸநாயக்க, புலனாய்வுப் பிரிவு கமாண்டர் சுமித் ரணசிங்க, கடற்படை கப்டன் லக்ஷ்மன் உதயகுமாரமற்றும் புலனாய்வு அதிகாரிகளான லலித் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிட இஹலகெதர தர்மதாஸ, ராஜபக்ச பத்திரணலாகே கித்சிறி, கஸ்தூரிகே காமினி, முத்துவாஹென் நெதி அருண துஷார மெண்டிஸ் மற்றும் முன்னாள் லெப்டினண்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மற்றும் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் 13 வருடங்களாக பல் வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்த நாம் இந்த 14 குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டு நியாயம் நிலைநாட்டப்படும் என நம்புகிறோம் என காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரின் பெற்றோர் கூறியுள்ளனர்.

இந்த விடயமானது இயற்கையின் கோட்பாடுகளுக்கும் நீதிக்கும் எதிரானது என்பதால், ஆதரவற்ற பாதிக்கப்பட்ட பெற்றோருக்காக, வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை மீளப் பெறுவதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# இரண்டு வாரங்களுக்கு நாட்டை முடக்குங்கள்

## மருத்துவ வல்லுநர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

**கொழும்பு, ஓக.14**

**கோவிட் -19 நோய்த்தொற்றுகள் மற்றும் உயிரிழப்புகளை பரவாமல் தடுக்க குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் மற்றும் இடைநிலைக் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளது.**

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், அத்தியாவசிய சேவைகள் மற்றும் தடுப்பூசி திட்டம் தடையின்றி பராமரிக்கும் போது ஊரடங்கு விதிக்கப்படவேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவன;

கோவிட்- 19 நோயாளிகளின் பராமரிப்புக்காக சேவைகளை வழங்கும் அனைத்து வைத்தியசாலைகளும் அவற்றின் முழுத் திறனைத் தாண்டிவிட்டன. மேலும் எந்த புதிய கோவிட்- 19 நோயாளிகளுக்கும் நோயாளர் படுக்கைகள் கிடைக்கவில்லை.

கோவிட்- 19 நோயாளிகளுக்கு வைத்தியசாலைகள் இடைவிடாமல் விரிவாக்கம் செய்வதால், மற்ற நோய்களுக்கான சேவைகளும் கடுமையாக சமரசம் செய்யப்படுகின்றன. சுகாதாரப் பணியாளர்களிடையே தொற்று பரவுவது அவர்களின் உடல்நலக்குறைவுக்கு வழிவகுத்தது. ஊழியர்களின் கடுமையான பற்றாக் குறைக்கு வழிவகுத்தது.

அனைத்து முதியவர்களுக்கும் மற்றும் நோய்த்தொற்று உள்ளவர்களுக்கும் ஒரு டோஸுடன் கூட சில நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் தடுப்பூசிகளை ஒதுக்க வேண்டும்.

மோடர்னா, பைசர் மற்றும் அஸ்ட்ராசெனேகா போன்ற சில தடுப்பூசிகள் தடுப்பூசியின் ஒரு டோஸைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க பாதுகாப்பைத் தூண்டுகின்றன. அதே நேரத்தில் சினோபார்மின் ஒரு டோஸ் இரண்டாவது டோஸ் கொடுக்கப்பட்ட இரண்டு வாரங்கள் வரை எந்தப் பாதுகாப்பையும் அளிக்காது" என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நோய்த்தொற்று உள்ளவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அதிக நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கு விரைவாக நோய் எதிர்ப்பு சக்தி தேவைப்படுவதால், வயதானவர்களுக்கும், மேற்கூறிய தடுப்பூசிகள் மூலம் கொமொர்பிடிட்டி உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடுவது அதிக உயிர்களைக் காப்பாற்றும்-என்றுள்ளது.



# வவுனியா மக்களே அவதானம்!

## 2ஆவது கொரோனா விடுதியும் நிறைந்தது

வவுனியா, ஓக. 14

வவுனியா மாவட்டத்தில் கொரொனா நோயாளர்கள் அதிகரித்து இரண்டாவது விடுதியும் கொரொனா நோயாளர்களால் நிரம்பியுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் கலைநாதன் ராகுலன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

வவுனியா பொது வைத்தியசாலையில் நாளுக்கு நாள் கொரொனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் முதலாவது கொரோனா தொற்றாளர் விடுதி அண்மையில் நோயாளர்களால் நிரம்பியமையால் இரண்டாவது நோயாளர் விடுதியும் நோயாளர்களுக்காக திறக்கப்பட்டது.

தற்போது அந்த விடுதியும் நிரம்பியுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மாவட்ட பொது வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் நால்வர் அதி தீவிர சிகிச்சை பிரிவிலும் 20 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் ஒட்சிசன் தேவையுடையோராகவும் காணப்படுகின்றனர்.

மேலும், நால்வர் கொரொனா தொற்றினால் கடந்த ஒரிரு நாட்களில் மரணமடைந்தனர்.

நாட்டில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படக்கூடிய தருணத்தில் வவுனியா வைத்தியசாலையிலும் ஒட்சிசன் தேவையுடையோர் அதிகரித்து வருகின்றனர்.

இந் நிலையில் நாட்டில் கொரோனா மரணங்களும் தொற்றாளர்களும் அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும், வவுனியா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார உத்தியோகத்தர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாவதால் வைத்தியசாலை 'நிர்வாக இரட்டை கடின நிலையை' எதிர்நோக்கியுள்ளது. கடும் மனித வலு பிரச்னையையும் சந்தித்துள்ளது.

இவ்வாறான சூழலில் மக்கள் தம்மை தாமே பாதுகாத்து கொள்வதுடன் வவுனியா மாவட்டத்தில் நோயாளர் அதிகரிப்பை கட்டுப்படுத்த கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

# புதிய எரிவாயு நிறுவனத்தை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, ஓக. 14

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்ததாக புதிய நிறுவனத்தை ஆரம்பித்து எல்.பி எரிவாயுவை தயாரித்து போட்டி விலையில் சந்தைக்கு விநியோகிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தற்போது இலங்கையின் எல்.பி எரிவாயு தேவையில் சுமார் 5 வீதத்தை உற்பத்தி செய்யும் நிலையில் இந்த தயாரிப்புகளை லிட்ரோ எரிவாயு நிறுவனம் மற்றும் லாப் எரிவாயு நிறுவனத்திற்கு சமமாக வழங்குகிறது.

சக்தி வளங்கள் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை சப்புகஸ்கந்த பிரதேசத்தில் நிர்மாணிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ள நிலையில், குறித்த சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் உள்நாட்டு சமையல் எரிவாயு தேவையில் 20 சத வீதத்தை உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை உள்ளதாக இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# இலங்கையர்களுக்கு பயணத்தடையை நீடித்த பிலிப்பைன்ஸ்

கொழும்பு, ஓக. 14

இலங்கையிலிருந்து வரும் பயணிகளுக்கான தடையை ஓகஸ்ட் இறுதி வரை பிலிப்பைன்ஸ் நீடித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் , இலங்கை, நேபாளம், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை பிலிப்பைன்ஸ் நீடித்துள்ளது.

இத்தடை உத்தரவானது ஓகஸ்ட் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை அமுலாகும் எனவும் பிலிப்பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

குறித்த நாடுகளில் காணப்படும் கொரோனா வைரஸ் நிலைமையை கருத்திற் கொண்டே இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக பிலிப்பைன்ஸ் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதேசசபை ஊழியர் ஒருவர் வீதியில் வீழ்ந்து உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஓக. 14

கிளிநொச்சியில் பிரதேச சபை ஊழியர் திடீரென வீதியில் வீழ்ந்து உயிரிழந்தமை அப்பகுதியில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் மதிய உணவுக்காக செல்வதாக புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் வீதியில் வீழ்ந்து உயிரிழந்தார்.

கிளிநொச்சி மாவட்டம் உதயநகர் பகுதியைச் சேர்ந்த, 47 வயது மதிக்கத்தக்க விஜயகுமார் என்ற வெளிக்களத் தொழிலாளியே உயிரிழந்தார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி நகரில் திருநகர் வீதியில் அரச நில அளவைத் திணைக்களத்துக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுகாதாரத்தரப்பினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# ஹிஷாலினியின் சடலம் நேற்று பெற்றோரிடம் மீள கையளிப்பு

கொழும்பு, ஓக. 14

அண்மையில் 2ஆவது மரண பரிசோதனைக்காக தோண்டி எடுக்கப்பட்ட சிறுமி ஹிஷாலினியின் சடலம், அவரது பெற்றோரிடம் மீள கையளிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த மலையகச் சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சிறுமி ஹிஷாலியினின் சடலத்தை மீள தோண்டி, 2ஆவது மரண பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

குறித்த நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு, பேராதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நீதிமன்ற வைத்தியத்துறை தொடர்பான பேராசிரியர் ஜின் பெரேரா தலைமையிலான குழுவே, சிறுமியின் சடலத்தை மரண பரிசோதனைக்கு உட்படுத்தி இருந்தது.

இந்நிலையில் 2ஆம் பரிசோதனை நிறைவடைந்துள்ள நிலை யில், ஹிஷாலினியின் சடலம் நேற்று பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டது.

(அ)

# கட்சி தலைவர்கள் கூட்டம் திங்களன்று

கொழும்பு, ஓக. 14

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்களின் அவசர கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

அதன்படி, இந்த கூட்டமானது எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

# திருகோணமலை சேருவிலவில் வர்த்தக நிலையங்கள் மூடல்!

திருமலை, ஓக. 14

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பிரதேசத்தில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை சேருவில ஐக்கிய வர்த்தக மற்றும் தொழில் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

இதன்படி, நேற்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை வரை சேருவில பிரதேசத்தில் உள்ள அனைத்து கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை மூட தீர்மானிக் கப்பட்டுள்ளதாக சேருவில ஐக்கிய வர்த்தக மற்றும் தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இத்தகவல் அடங்கிய துண்டு பிரசுரம் அனைத்து இடங்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள தாகவும் சேருவில ஐக்கிய வர்த்தக மற்றும் தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் சகல விடுதிகளும் நிறைந்தன

## ஒட்சிசனுக்கும் தட்டுப்பாடு




**யாழ்ப்பாணம், ஒக. 14**

**யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள், அதிதீவிர சிகிச்சை பிரிவு, கோப்பாய் இடைநிலை சிகிச்சை மையம் என்பன நோயாளர்களால் நிறைந்துவிட்டன. இந்த நிலையில் விபத்து, குழு மோதல்களால் தினமும் 70-80 நோயாளர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவது பெரிய சுமையாக உள்ளது.**

இதுவரை ஒட்சிசனை பெற்ற அனுராதபுரத்திலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையில் கொரோனாவினால் இறந்தவர்களின் உடல்கள் தேங்கிக் கிடக்கின்றன என தெரிவித்துள்ளார் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் சிறிபவானந்த ராஜா.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விடுதிகள், அதிதீவிர சிகிச்சைப்பிரிவு நோயாளர்களால் நிறைந்துள்ளன.

கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பெரும் நெருக்கடியை சந்திக்கிறோம். கோப்பாய் இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் 420 பேரே தங்கி சிகிச்சை பெற முடியும். ஆனால் இன்று 430 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கு தங்கியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசன் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதுவரை அனுராதபுரத்துக்கு தினமும் வாகனங்களை அனுப்பி ஒட்சிசனை பெற்றோம். ஆனால், அனுராதபுரத்திலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நேற்று முன்தினம் முதல் கொழும்புக்கு வாகனங்களை அனுப்புகிறோம்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழப்பவர்களை கோம்பயன் மயானத்தில்தான் தகனம் செய்யும் வசதியுண்டு. தினமும் 4 சடலங்களை மட்டுமே அங்கு கொண்டு செல்ல முடியும். கடந்த 5 மாதங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் 140 பேர் உயிரிழந்தனர். ஏனைய வைத்தியசாலைகளில் 16 பேர் உயிரிழந்தனர். தகனம் செய்ய திகதி பெற முடியாமல் வைத்தியசாலையில் பல உடல்கள் தேங்கியுள்ளன-என்றார்.

# முடக்கத்தை தீர்மானிப்பது அரசே!

## மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத்

கொழும்பு, ஒக. 14

கோவிட் நிலைமையைக் கருத்திற் கொண்டு மருத்துவ நிபுணர்கள் சிலர் நாட்டை முடக்கு மாறு வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், ஒரு சில தரப்பினர் முடக்கத்திற்கு செல்வதால் மாத்திரம் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் முடக்கம் குறித்து தீர்மானிப்பது அரசாங்கமே தவிர நாம் அல்லர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கொவிட் நிலைமை தொடர்பில் விசேட வைத்திய நிபுணர்கள், மருத்துவர் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவற்றால் பல எதிர்வு கூறல் அறிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான எதிர்வுகூறல்களை முன்வைத்துள்ள ஒரு சில தரப்பினர் நாட்டை முடக்காமல் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

பிறிதொரு தரப்பினர் பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு முடக்கம் மாத்திரமே தீர்வாக அமையாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு மாறுபட்ட நிலைப்பாடுகளும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளளே முடக்கம் தொடர்பில் கலந்துரையாடி இறுதி தீர்மானத்தை எடுப்பர். இந்த தீர்மானங்கள் எம்மால் எடுக்கப்படுபவை அல்ல-என்றார்.

# கிராமப்புறங்களில் உள்ள மக்களை பற்றி சிந்திக்காதோரே நாட்டை முடக்க கோருகின்றனர்!

## கூறுகின்றார் பிள்ளையான்

மட்டக்களப்பு, ஒக. 14

நாட்டை முடக்கவேண்டும் என்று கோருபவர்கள் கணிசமாக கிராம புறங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை, வருமானத்தைப்பற்றி சிந்திக்கவில்லையென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்ரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீசட்த்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் வீதி பெருந்தெருக்கள் அமைச்சும், கிராமிய வீதி, அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சும் இணைந்து முன்னெடுக்கும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதியை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வீதிகள் தொடர்ச்சியாக புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு திராய்மடு பகுதியில் மிகவும் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையிலிருந்த திராய்மடு வீடமைப்பு திட்ட வீதியின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் சுமார் ஒரு கிலோ மீற்றர் வீதி இவ்வாறு புனரமைக்கப்படுகின்றன.

இந்த வீதியின் புனரமைப்பு பணிகளை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவரு



மான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியிலாளர் உட்பட பலர்கலந்துகொண்டனர்.

கோவிட் தொற்று உட்பட பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அபிவிருத்திப்பணிகளையும் முன் கொண்டு செல்லக்கூடிய தேவையேற்பட்டுள்ளதாகவும் சந்திகாந்தன் தெரிவித்தார்.

# பருத்தித்துறை நீதிமன்றுக்கு சென்ற சந்தேகநபர்கள் இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஒக. 14

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த அழைத்துச் செல்லப்பட்ட சந் தேகநபர்கள் இருவர் சுகயீனம் காரணமாக உடனடியாக மந்திகை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையில் அவர்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 6 பேரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் இரண்டு பேர் நீதிமன்ற வளாகத்தில் திடீர் சுகயீனம் எனத் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்ரிஜென் பரிசோதனையில் கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டனர். இருவரும் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்கள் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

# நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக. 14

குடும்பநல சுகாதார சேவை அலுவலருக்கான பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைகள் இன்று குருநாகல் மற்றும் பதுளை தாதியர் பாடசாலையிலும் கொழும்பு சுகாதார அமைச்சிலும் நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒக. 21 கறுப்பு கொடி தினம்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு

கொழும்பு, ஒக. 14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையாக விசாரணைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஓகஸ்ட் 21ஆம் திகதி கறுப்பு கொடி தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவிப்பை கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விடுத்தார்.

அத்துடன், ஜூலை 13 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு தான் எழுதிய கடிதத்துக்கும் சரியாக பதிலளிக்கப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

# மேலும் 2,173 பேர் குணமடைந்தனர்

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 2 ஆயிரத்து 173 பேர், குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 04ஆயிரத்து 628 ஆக அதிகரித்துள்ளது.

# மட்டு. மாநகர ஆணையாளர் உட்பட மேலும் ஐவருக்கு கொரோனா உறுதி

மட்டக்களப்பு, ஒக. 14

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உட்பட மேலும் ஐவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபையில் கடந்த மூன்று தினங்களாக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுவரும் நிலையில் மாநகர சபை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில்,நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உட்பட மாநகரசபையில் கடமையாற்றும் ஐந்து பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று தினங்களுக்குள் மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உட்பட எட்டுப்பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் நேற்று தொற்றாளர்களுடன் தொற்றுக்குள்ளானவர்களது மொத்த எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# குழந்தை பருவ நோயாக கொரோனா மாறலாம்!

## ஆராய்ச்சியில் எச்சரிக்கை



**அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் நோர்வே யின் ஒஸ்லோ பல்கலைக்கழகம் இணைந்து செய்த ஆராய்ச்சி யின் முடிவில் இந்த கண்டுபிடிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரையில் பல்வேறு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன**

கொரோனா வைரஸ் குழந்தை பருவ நோயாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதாவது குழந்தைகளிடம் இயல்பாக பரவும் காய்ச்சல் போல வரும் காலங்களில் கொரோனாவும் பரவ வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டுள்ளது

பல்வேறு நாடுகளில் இன்னும் கொரோனா பரவல் குறையாத நிலையில், இது ஒரு குழந்தை பருவ நோயாக மாறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் நோர்வேவின் ஒஸ்லோ பல்கலைக்கழகம் இணைந்து செய்த ஆராய்ச்சியின் முடிவில் இந்த கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரையில் பல்வேறு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன

அதில், கொரோனா வைரஸ் என்பது குழந்தை பருவத்தில் பரவும் நோய் போல மாறலாம். குழந்தைகளுக்கு பரவும் காய்ச்சல் போல வரும் காலங்களில் கொரோனா வைரஸூம் பரவும் வாய்ப்புகள் உள்ளது. வரும் வருடங்களில் அதிக அளவில் இளம் குழந்தைகள், சிறுவர் சிறுமிகள் பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளது. இந்த வைரஸ் உலகம் முழுக்க பரவும். உலகம் முழுக்க நீக்கமற இடம்பெறும்.

தற்போது பன்டமிக் என்ற நிலையில் இருக்கும் வைரஸ் எண்டமிக் (endemic) என்ற நிலைக்கு செல்லும். ஒரு வைரஸை அழிக்க முடியாமல் போய் அது மனித வாழ்க்கையோடு ஒரு அங்கமானால் அது எண்டமிக் தொற்றாக மாறும். அதாவது இந்த எண்டமிக் நோய் அழிக்கப்படாமல் எப்போதும் மக்களோடு இருக்கும். அவ்வப்போது குறிப்பிட்ட இடைவெளியில் அந்த நோய் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட சில நாடுகளில் தோன்றி மறையும். இதுதான் எண்டமிக் தொற்று. இதேபோல் கொரோனாவும் மாறும் வாய்ப்பு உள்ளது.

அப்போது முதியவர்கள் பாதிப்பதை விட குழந்தைகள் அதிகம் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. முக்கியமாக தடுப்பூசி போடாத குழந்தைகள், புதிதாக பிறக்கும் குழந்தைகளை அதிகம் பாதிக்கும் வாய்ப்புள்ளது. இப்போது முதியவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டாலும் எங்களின் ஆய்வுப்படி வரும் காலங்களில் குழந்தைகள்தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள். முதியவர்களுக்கு தடுப்பூசி மூலமோ அல்லது ஏற்கனவே ஏற்பட்ட கொரோனா மூலமோ எதிர்ப்பு சக்தி கிடைத்துவிடும்.

குழந்தைகள் இனி பாதுகாப்பாக இருக்க வேண்டும். இதற்கு முன் உலகம் முழுக்க பரவிய சுவாசம் தொடர்பான தொற்று நோய்களும் இப்படித்தான் பரவி இருக்கிறது. 1889-1890 ல் பரவிய ரஷ்யன் ப்ளூ காய்ச்சல் தொடக்கத்தில் முதியோர்களை தாக்கி கொன்றது. தற்போது எண்டமிக் நோயாக மாறிவிட்ட இது குழந்தைகளை அதிகம் தாக்குகிறது. இப்போது 7-12 வயது கொண்ட குழந்தைகள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.


அதேபோல் கொரோனாவும் மாறும். அதே சமயம் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கு இந்த கொரோனா மீண்டும் பரவ தொடங்கினால், வயதானவர்களுக்கும் மீண்டும் இது பரவும் வாய்ப்பு உள்ளது. அதாவது ஏற்கனவே பாதிக்கப்பட்ட வயதானவர்கள் மீண்டும் பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படலாம். வைரஸின் தாக்கம் கொஞ்சம் குறைவாக இருக்கலாம். “சீசன் நோய்“ தாக்குதல் போல அடிக்கடி இதன் பாதிப்பு வந்து போகலாம் என்று இந்த ஆராய்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்று நோயில் மூக்கில், தலையில் உண்டாகும் பிரச்னைகளுக்கு மூலிகைத் திரி

**வைத்தியர்**
**செ.போல்ரன் றஜீவ்**







உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா நோய்க்காக எமது சித்தர்கள் எமக்கு அருளிய தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவத்தினால் புதிய தொற்றுநோய்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைகள் பல குறிப்பிடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில், சித்த மருத்துவத் துறையினால் பரிந்துரைக்கப்பட்ட ‘மூலிகைத்திரி’ (Medicated Smoulder) கோவிட்-19 தொற்று நோயில், மூக்கிலும், தலையிலும் உண்டாகும் பிரச்னைகளுக்கு சிறந்த தீர்வாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**தேவையான மூலிகைகள்:**

1. மஞ்சள்- 300 கிராம்
2. ஓமம்- - 100 கிராம்
3. மிளகு- 100 கிராம்
4. திப்பலி- 100 கிராம்
5. நொச்சிச்சாறு- தேவையானளவு

**செய்முறை:**

மஞ்சள், ஓமம், மிளகு, திப்பிலி போன்றவற்றை குறிப்பிட்டளவு எடுத்து நன்கு தனித்தனியே பொடியாக்கி பின் ஒன்றாகச்சேர்த்து மொத்தமாக தூள் அமிழும் வரை நொச்சிச்சாறு (இலைச் சாறு) விட்டு குழைத்து 4 அங்குலம் (10 செ.மீ.) கட்டுத்துணியில் பரவி ஒரு சாண் (20 செ.மீ.) நீளத்தை வெட்டி எடுத்து சுருட்டி நிழலில் நன்றாக உலர்த்தி எடுத் துக் கொள்ளல்.

**பயன்படுத்தும் முறை:**

மூலிகைத்திரியின் ஒரு பக்கத்தை எரித்து புகையை ஒவ்வொரு மூக்குத் துவாரத்தினூடாகவும் உள்ளிழுத்துக் கொள்ளல். இவ்வாறு இரு மூக்குத் துவாரத்தினூடாகவும் 02 - 03 முறை உள்ளிழுத்துக் கொள்ள போதுமானதாகும். பின்னர் நெருப்பினை அணைத்து மீண்டும் திரியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

எரியூட்டப்பட்ட திரியை துளையிடப்பட்ட பெட்டியோ, சிரட்டையிலோ, வேறு ஏதேனும் மூடப்பட்ட பொருளினுள் வைத்து புகையை மட்டும் மூக்குத்துவாரத்தினுள் இழுக்க வேண்டும்.

**இதன் பலன்கள்:**

கோவிட்-19 தொற்று நோயில், மூக்கில் உண்டாகும் பிரச்னைகளான -



- மூக்கடைப்பு,
- மூக்கால் நீர்வடிதல்,
- மணமின்மை போன்றவையும்

தலையில் உண்டாகும் பிரச்னைகளான -

- தலைப்பாரம்,
- தலைவலி போன்றவற்றையும் நீக்கும்.

புகையை நுகரும் போது, மண நுகர்ச்சி நரம்பின் இழையங்களின் (Olfactory Sensory Epithelium) தாபிதம் மிக விரைவில் குறைக்கப்படுவதால் தொற்று நோயால் ஏற்படும் மூக்கில் மணம் அறியாமை, சுவையின்மை, குமட்டல் விரைவில் குறைக்கிறது.

**பயன்படுத்தக்கூடாதவர்கள்:**

- மூக்கால் இரத்தம் வருதல்
- மூக்கில் சத்திரசிகிச்சை அண்மையில் மேற்கொண்டவர்கள்
- சமீபத்தில் கண்ணில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டவர்கள்
- மருத்துவர்களால் மூக்கினால் புகை இழுக்கக்கூடாதென அறிவுறுத்தப்பட்டவர்கள்.

**விஞ்ஞானரீதியான பரிந்துரைகள்:**

மஞ்சள், ஓமம், மிளகு, திப்பிலி மற்றும் நொச்சி இலைச்சாறு போன்ற மூலிகைகளில் காணப்படும் மருத்துவ முக்கியத்துவமான வேதியியற் பொருட்களின் மூலம் எமது உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மருத்துவ குணங்களினாலும், செய்கையினாலும் நீக்கப்படுகின்றமை தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக, மஞ்சள், ஓமம், மிளகு, திப்பிலி மற்றும் நொச்சி இலைச்சாறு போன்ற மூலிகைகளில் காணப்படும் மருத்துவ முக்கியத்துவமான வேதியியற் பொருட்கள் முறையே: குர்குமின் (Curcumin) தைமோல் (Thymol), பைபரின் (Piperine), and Volatile Oil - லினலோல் (Linalool), குளோபுலோல் (Globulol), பீட்டா-கரியோபைலின் (Beta - Carryophylene), and ஸபினீன் (Sabinene) காணப்படுகின்றன.

இந்த இரசாயனப்பொருட்கள்: நுண்ணுயிர்கொல்லி (Antimicrobial), Antioxidant, சிவகற்றி (Antispasmodic), தாபமகற்றி (Anti Inflammatory), உணர் விழக்கி (Analgesic) பக்ரீயாக் கொல்லி (Antibacterial) போன்ற மருத்து வச் செய்கைகளைக் காண்பிக்கின்றமை நிரூபிக்கப்பட்ட முடிவுகளாகும்.

எனவே விஞ்ஞானரீதியான முடிவுகளின் படி சித்த மருத்துவத்துறையினால் பரிந்துரைக்கப்பட்ட ‘மூலிகைத்திரி’ (Medicated Smoulder) கோவிட்-19 தொற்று நோயில், மூக்கிலும், தலையிலும் உண்டாகும் பிரச்சனைகளுக்கு சிறந்த தீர்வாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலகுவாகத் தயாரிக்கக் கூடிய இதனைத் தயாரித்து நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் பயனடையும் வகையில் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பங்களிப்புச் செய்யுங்கள்.

கோவிட்-19 தொற்று நோயில், மூக்கில், தலையில் உண்டாகும் பிரச்னைகளுக்கு மூலிகைத்திரியை இலகுவாக வீட்டிலேயே செய்து பயனவைவோம்.

**( கட்டுரையாளர் சுதேச வைத்தியத் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை.)**

● நியூசிலாந்து சிற்சபேசன்

> வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பு ஏற்பது, வலி குறித்துப் பேசுவதற்கான வெளியை ஏற்படுத்துவது, தவறுகளுடன் சேர்த்து வலிகளையும் ஆவணப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலமாக ரணங்களை ஆற்றுபடுத்த நியூசிலாந்து முற்பட்டது. அதுவே ஆரோக்கியமான தேசமாக நியூசிலாந்தைக் கட்டியெழுப்புகின்றது.



# நியூசிலாந்து வரலாற்றில் கறை படிந்த காலம்

பசுபிக் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதென்பதை நியூசிலாந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்கான பூர்வாங்க மன்னிப்பையும் கோரியிருக்கின்றது. தவறுகளைச் சீவிச்சிங்காரிப்பது நியூசிலாந்தின் மரபல்ல. அந்த வகையிலே, வரலாற்றுத் தவறுகளை ஏற்றுக்கொள்வதற்குக்கூட எப்போதுமே தேசம் தயங்கியதில்லை.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் நியூசிலாந்தின் பொருளாதார வளர்ச்சி வேகமடைந்திருந்தது. அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆளணிவளம் தேசத்தில் இருக்கவில்லை. அதனால், **1950** களிலிருந்து சமோவா, ரொங்கா, பிஜி போன்ற பசுபிக் தீவுகளிலிருந்து தொழிலாளர்கள் அழைத்துவரப்பட்டனர். பொருளாதார வளர்ச்சியின் வேகம் காலப்போக்கில் குறைந்தது. அதற்குக் கம்பளி விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா இணைந்தபோது பால் ஏற்றுமதியில் ஏற்பட்ட இழப்பு, **1973**இல் ஏற்பட்ட பெற்றோலிய நெருக்கடி போன்றவை முக்கிய காரணங்களாகின.

பொருளாதார வளர்ச்சி மந்தமாகியபோது வேலையில்லாத் திண்டாட்டம் ஆரம்பமாகியது. வன்முறை, களவு உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளும் அதிகரித்தன. அத்தகையதொரு சூழ்நிலையில், பசுபிக் மக்களின் சனத்தொகையே பலரது கண்களையும் உறுத்தின. வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு பசுபிக் மக்களே காரணமென்னும் சீற்றம் ஏற்பட்டது. பொதுசன அபிப்பிராயத்தை அரசியல்வாதிகளும் பற்றிக்கொண்டனர்.

பசுபிக் மக்கள் தொடர்பிலான அரசின் கவனம் கூர்மையாகியது. காலவதியாகிய வீசாவைக் கொண்டிருந்தவர்களைச் சொந்தநாட்டுக்கு திருப்பியனுப்புவதற்கான திட்டத்தை அரசு ஆரம்பித்தது. அதற்கான சிறப்பு பொலிஸ் குழுவை **1973**இல் லேபர் கட்சி அரசு நியமித்தது. காலவதியாகிய விசாவைக் கொண்டிருந்தவர்கள் என்னும் கோதாவில் பசுபிக் மக்களே அதிகளவில் இலக்குவைக்கப்பட்டனர்.

பசுபிக் மக்கள் வசித்த வீடுகளில் விடியல் பொழுதில் பொலிஸ் புகுந்தது. பொலிஸாரின் அல்சேஷன் நாய்களின் குரைப்பு மக்களை அச்சுறுத்தியது. சிறுவர்கள், பெண்கள் அலறினார்கள். முதியவர்கள் அதிர்ந்தனர். தொழிற்சாலை, கடைத்தெரு, பள்ளி, தேவாலயம் என பசுபிக்மக்கள் கூடுகின்ற இடங்களிளெல்லாம் தேடுதல் நடைபெற்றது. நியூசிலாந்தில் வசிப்பதற்கான ஆவணத்தை எந்தநேரமும் வைத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை, வெள்ளையர் அல்லாதவர்களுக்கு, ஏற்பட்டது. அது, பூர்வகுடியான மவோரி உள்ளிட்ட, வெள்ளையர் அல்லாத, அனைவரையும் அச்சப்படுத்தியது.

காலவதியான வீசாவைக் கொண்டிருந்தவர்களுக்கான தேடலில், வெள்ளையர் அல்லாதவர்களே இலக்கு என்பதில் ஒளிவுமறைவு இருக்கவில்லை. அதனையே தரவுகளும் வெளிப்படுத்தின. காலவதியான வீசாவைக் கொண்டிருந்தோரில் மூன்றில் ஒரு பங்கினரே பசுபிக் மக்களாகும். மற்றையோர், பிரித்தானியா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாகும். ஆனாலும், சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களிலே **86** விகிதமானோர் பசுபிக் மக்களாகவே காணப்பட்டனர்.

விடியலில் தேடல் நடவடிக்கை நிறப்பாகுபாட்டைக் கொண்டிருப்பதான கண்டனங்கள் காலப்போக்கில் எழுந்தன. அது தொடர்பிலான எதிர்ப்பும் அதிகரித்தது. அதனால், விடியலில் தேடல் நடவடிக்கை தொடர்பில் லேபர் கட்சி அரசு மென்போக்கைக் கடைபிடிக்க ஆரம்பித்தது. அன்றையகாலத்தில் பொதுத்தேர்தல் நடைபெறவிருந்தது. அதுவும் அரசின் மனமாற்றத்துக்குக் காரணமாக இருந்திருக்கலாம். இருந்தபோதிலும், பொதுத்தேர்தலில் லேபர் கட்சி தோற்றது. **1975**இல் ஆட்சியமைத்த நஷனல் கட்சி அரசு விடியலில் தேடல் நடவடிக்கையை தீவிரப்படுத்தியது.

அதனைத்தொடர்ந்து, விடியலில் தேடல் நடவடிக்கைக்கான எதிர்ப்பும் வேகமாக அதிகரித்தது. பசுபிக் மக்கள், மாவோரிமக்கள், தொழிற் சங்கங்கள், மனிதவுரிமை, லிபரல் மற்றும் கிறிஸ்தவ அமைப்புக்கள் ஒன்றுதிரண்டன. எதிர்கட்சியான லேபர்கட்சியும் எதிர்ப்புக்களத்தில் நுழைந்தது. பொலிநேஷியன் பந்தேர்ஸ் என்னும் அமைப்பு ஒருபடி மேலே சென்றது. முக்கிய அமைச்சர்களின் வசிப்பிடங்களிலே விடியலில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியது. அது, உயிர்ப்பூட்டமான எதிர்ப்பு நடவடிக்கையெனச் சிலாகிக்கப்பட்டது. பொதுசன அபிப்பிராயமும் அரசுக்கு எதிராக மாற்றமடைய ஆரம்பித்தது. அதனை அரசும் உணர்ந்துகொண்டது. அத்துடன், பசுபிக்மக்கள் தொடர்பான நடவடிக்கை பொருளாதார மீட்சியில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதும் தெளிவாகியது. அத்தகைய பின்னணியிலே, விடியலில்தேடல் நடவடிக்கையை நஷனல்கட்சி அரசு **1979**இல் நிறுத்தியது.

ஆனாலும், விடியலில்தேடல் நடவடிக்கை பசுபிக் மக்களின் மனங்களில் ரணங்களாகின. சமூகத்தின் வேதனை ஆற்றுப்படுத்தப்படவில்லை. பசுபிக்மக்கள் எதிர்கொண்ட வலியும் வேதனையும் தொடர்ச்சியான பேசுபொருளாகின. விடியலில்தேடல் நடைபெற்ற காலங்களில் பெரியவர்கள், பெண்கள், சிறுவர்கள் என பலதரப்பினரும் பாதிக்கப்பட்டனர். நாளும்பொழுதும் அச்சத்துடனேயே வாழ்ந்தனர். விடியல்பொழுதில் அல்சேஷன் நாய்களின் குரைப்பும், வீடுகளில் தடாலடியாக நுழைந்த பொலிசும் பிஞ்சு உள்ளங்களில் ஏற்படுத்திய அச்சம் வர்ணிக்க முடியாதது. அந்தச்சம்பவத்தை நேரடியாக அனுபவித்த அறுபதுவயது நிரம்பிய வில்லியம் சியோ தற்போதைய அரசில் அமைச்சராகவுள்ளார். செய்தியாளர் சந்திப்பொன்றில் விடியலில்தேடல் அனுபவத்தை விபரித்தபோது உணர்ச்சிவசப்பட்டார். கண்ணீர் சிந்தினார்.

மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசு என்பதே சனநாயகத்தின் அடிப்படையாகும். அதுவே நியூசிலாந்தின் மரபுமாகும். அதனாலேயே, ஒரு சமூகத்தின் வலிகளை அரசால் உணர்ந்துகொள்ளமுடிந்தது. பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது. முதல்படியாக, விடியலில்தேடல் நடவடிக்கை வரலாற்றுத் தவறு என்பதை அரசு ஏற்றுக்கொண்டது. அரசினுடைய தீர்மானத்தை எதிர்கட்சிகள் ஏற்றுக்கொண்டன. பரந்துபட்ட நியூசிலாந்து சமூகம் ஆதரித்தது.

வரலாற்றுத் தவறை பகிரங்கமாக ஏற்றுகொள்வதற்கும், பூர்வாங்க மன்னிப்பைக் கோருவதற்குமான வைபவம் ஓகஸ்ட் **1**இல் நடைபெற்றது. ஒக்லாந்து நகரசபை மண்டபத்தில் பாதிக்கப்பட்ட சமூகத்திலிருந்து ஆயிரம் பேர் வரையில் திரண்டிருந்தனர். அல்சேஷன் நாய்களின் குரைப்பு, வீட்டுக்கதவுகள் தட்டப்படும் அச்சமூட்டும் ஓசை, சப்பாத்துக் கால்களின் கனத்த அசைவு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் அழுகுரல் என்பவை வைபவத்தின் ஆரம்பத்தில் ஒலிக்கப்பட்டது. நினைவுகள் மீட்டப்பட்டது. மண்டபத்தைச் சோகம் கவ்வியது. பலர் கண்கலங்கினார்கள்.




வரலாற்றுத் தவறுக்காக நியூசிலாந்துப் பிரதமர் நிபந்தனையற்ற மன்னிப்பை, பாதிக்கபட்ட சமூகத்திடம், கனிவாகக் கோரினார். அதனைப் பசுபிக் மக்கள் பெருமனதோடு ஏற்றுக் கொண்டனர்.

வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பு ஏற்பது, வலிகுறித்துப் பேசுவதற்கான வெளியை ஏற்படுத்துவது, தவறுகளுடன் சேர்த்து வலிகளையும் ஆவணப்படுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலமாக ரணங்களை ஆற்றுபடுத்த நியூசிலாந்து அவாவுகின்றது. அதுவே ஆரோக்கியமான தேசமாக நியூசிலாந்தைக் கட்டியெழுப்புகின்றது.

■

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II


நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்

36) ஒரு கடிகாரமுகத்தில் நிமிடமுள் 12 தடவை சுற்றி வரும் போது மணிமுள் எத்தனை தடவை சுற்றி வரும்?
(1) 24 தடவை (2) 12 தடவை (3) 1 தடவை

37)



= 60 = 68

இவ் உருக்களின் எண் பெறுமானத்தை விளங்கிக் கொண்டு  இவ்வுரு குறிக்கும் பெறுமானத்தைத் தெரிவு செய்க.
(1) 90 (2) 19 (3) 17

38) வகுப்பு A இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை வகுப்பு B இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் 10 குறைவானதாகும். இரு வகுப்புக்களிலும் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 80 எனின், வகுப்பு Aஇல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
(1) 40 (2) 50 (3) 60

- **பின்வரும் அட்டவணையை நன்றாக அவதானித்து 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் ஐந்து வீரர்கள் மூன்று சுற்று விளையாடிய விதம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| சுற்றுக்கள் | லவன் | லக்சன் | நிமல் | நிரஞ்சன் | கமல் |
|---|---|---|---|---|---|
| 1ம் சுற்று | ○ | ◉ | ◉ | ⊗ | ⊗ |
| 2ம் சுற்று | ◉ | ⊗ | ◉ | ◉ | ◉ |
| 3ம் சுற்று | ○ | ○ | ◉ | ○ | ◉ |

மிகநன்று ◉ ஓரளவு நன்று ○ குறைவு ⊗

39) மூன்று சுற்றுக்களிலும் மிக நன்றாக விளையாடியவர் யார்?
(1) லவன் (2) நிமல் (3) லக்சன்

40) முதல் சுற்றில் விளையாடியதை விட 2ஆம் சுற்றில் மிகத் திறமையாக விளையாடாதவர் யார்?
(1) கமல் (2) நிமல் (3) லக்கன்

***

- **பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்**

01) புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.
பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

i) வாத்து எங்கே முட்டைகள் இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது?
.................................................................................................................

ii) வினை அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.
.................................................................................................................

iii) பொழுது போக்க மற்றவர்களுடன் பேசும் பேச்சு எவ்வாறு அழைக்கப்படும்?
.................................................................................................................

iv) பந்தியில் கூறப்பட்ட நீர்நிலையின் பெயரை எழுதுக.
.................................................................................................................

v) அஃறிணைப் படர்க்கை பன்மை இறந்த கால வினைச் சொல் ஒன்றினை எழுதுக.
.................................................................................................................

vi) "ஐதான" என்பதைக் குறிக்கும் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
.................................................................................................................

02) **அஃறிணை நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**
(1) ஓடுகின்றார்கள். (2) மேய்ந்தன. (3) பறக்கின்றன.

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**
எங்களால் / அம்சங்களை / காலி / நுழைந்ததுமே / இரண்டு / நகருக்குள் / காணமுடிந்தது.
.................................................................................................................

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**
i) யானைக் கூட்டம் நீர் அருந்தின. ( )
ii) பறவைகள் வானத்தில் பறக்கும் ( )
iii) அம்மாவுடன் தங்கை கோயிலுக்குச் சென்றார்கள் ( )

05) **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**
டெங்குநுளம்பாரே நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா

06) (i) பின்வரும் பழமொழியை பூர்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.
.................................. பயிரை முறையிலே தெரியும்.

# நல்லூர் ஆலயத்துக்கு வருவதை தவிருங்கள்

### யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக.14

**“கொரோனாப் பரவல் காரணமாக நல்லூர் கந்தன் ஆலயத்துக்குள் செல்ல எவருக்கும் அனுமதி இல்லை. எனவே, ஆலயத்துக்கு வருவதைத் தவிருங்கள்.”**



- இவ்வாறு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமாகியுள்ள நல்லூர் கந்தன் வருடாந்த மகோற்சவ பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று (நேற்று) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 25 நாட்கள் வரை மகோற்சவம் நடைபெறவுள்ளது. தற்போது நாட்டில் கொரோனா நிலைமை மிகவும் தீவிரமாகக் காணப்படுகின்றது. தற்போதுள்ள கொரோனா தீவிர நிலையில் ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சால் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தச் சுற்றிநிருபங்களுக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாநகர சபை, ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து ஆலய உற்சவத்தைப் பாதுகாப்பான முறையில் எவ்வாறு நடத்துவது தொடர்பில் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

அந்த முடிவின் பிரகாரம் நல்லூர் ஆலய வளாகத்துக்குள் ஆலய நிர்வாகத்தினரால் அனுமதி அட்டை வழங்கப்பட்டோர் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். வேறு எவரும் ஆலய வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எனவே, பொதுமக்கள் தற்போதுள்ள தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு ஆலயத்துக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வீடுகளில் இருந்தவாறு நேரடியாக ஒளிபரப்பப்படும் ஆலய உற்சவத்தைத் தரிசியுங்கள். அவ்வாறு தரிசிப்பதன் மூலம் தொற்று நிலைமையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். தற்போது நாட்டில் கொரோனா பரவல் நிலைமை தீவிரமாகக் காணப்படுகின்றது. அந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்புக்காக இந்த ஏற்பாட்டை செய்துள்ளோம்” - என்றார். (இ - 03)



## வரதராஜ பெருமாள் ஆலய மகோற்சவம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஓக. 14

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ஆவணி மகோற்சவத்தை இம்முறை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மகோற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது எனப் பரிபாலன சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான ஆவணி மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ - 03)

## ஒரு கிலோ கஞ்சாவுடன் பிரிட்டன் பிரஜை கைது!

கொழும்பு, ஓக. 14

ஹிக்கடுவை பிரதேசத்தில் ஒரு கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் பிரிட்டன் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, 43 வயதான குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் தப்படவுள்ளார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 64 பேர் கைது!

கொழும்பு, ஓக. 14

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய மேலும் 64 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனிமைப் படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 54 ஆயிரத்து 100 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(இ)

## இளம் குடும்பஸ்தர் ஒருவர் விஷம் அருந்தி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு - கல்விளான் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் விஷம் அருந்தி உயிரிழந்தார்.

குறித்த குடும்பஸ்தர் விஷம் அருந்திய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்தநிலையில், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

33 வயதுடைய ப.நிரோஜன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 03)



## சிகிச்சை நிலையத்துக்கு மருத்துவ உபகரணங்கள்

அம்பாறை, ஓக. 14

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையிலுள்ள கொரோனாத் தடுப்புச் சிகிச்சை நிலையத்துக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா தொற்றின் தீவிர தன்மையைக் கருத்தில்கொண்டு இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தச் சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து வைப்பதற்காக முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன என்று பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் தெரிவித்தார். (இ)

## கல்கிஸை சிறுமி விவகாரம்: இதுவரை 45 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஓக. 14

கல்கிஸைப் பிரதேசத்தில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன் குறித்த சிறுமியை இணையத்தளத்தில் விற்பனைக்காக விளம்பரத்திய நான்கு இணையத்தளங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று இலங்கைப் பொலிஸாரினூடாக கணினி விசேட நிபுணர்களை நியமித்து, இணைத்தளங்களில் பதிவேற்றப்படும் சிறுவர் பாலியல் விடயங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

## தொலைபேசி திருடி விற்ற இருவர் புலனாய்வு பிரிவினரால் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 14



யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் தொலைபேசி திருடி விற்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றில் கடந்த வாரம் தொலைபேசி திருடப்பட்டது.

குறித்த தொலைபேசி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைச் சங்கானைப் பகுதியில் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளதுடன் தொலைபேசியையும் மீட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ - 03)

## மதுபான போத்தல்கள், பியர் ரின்களால் நிரம்பி வழியும் கிளிநொச்சி குளம்!

யாழ்ப்பாணம், ஓக. 14

சாராயப் போத்தல்களாலும் பியர் ரின்களாலும் நிரம்பி வழியும் குளமாக கிளிநொச்சிக் குளம் காணப்படுகின்றது.

இக்குளத்தின் பகுதியில் பெருமளவு மதுப்பிரியர்கள், தாங்கள் அருந்தும் சாராய மற்றும் பியர் ரின்களைக் குளத்தில் வீசுவதால் குளத்தில் எந் நேரமும் சாராய, பியர் ரின்கள் மிதப்பதைக் காணலாம்.

நன்னீர் மீன்பிடிக்காக வலை விரிக்கும் மீன்பிடியாளர் ஒருவரின் வலையில் மீன் அகப்படுகின்றதோ இல்லையோ, பியர் ரின்களும் சாராயப் போத்தல்களும் வலையில் சிக்குகின்ற அவலம் தொடர்கின்றது.

கிளிநொச்சி குளம் சுற்றுலா மையமாக உருவாக உள்ளது. தற்போது இரணைமடுக் குளத்தில் இருந்து இக்குளத்துக்கு நீர் வழங்கப்பட்டு, கிளிநொச்சி நகரத்துக்கான குடிதண்ணீர் வழங்கலுக்காக அருகில் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமானங்கள் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிளிநொச்சி நகரத்தின் கழிவுகள் இக்குளத்தின் சூழலில் கொட்டப்படுதைத் தடுப்பதற்கும், குளத்துக்குள் பியர் ரின்கள், சாராயப் போத்தல்கள் வீடுவதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சமூக நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# கிரீஸ் காட்டு தீயின் பின்னால் நிச்சயமாக இயற்கை இல்லை!

## கிரீஸ் பிரதமர் தெரிவிப்பு



எதேன்ஸ், ஓக. 14

கிரீஸில் ஏற்பட்ட அனைத்து காட்டு தீயின் பின்னாலும் இயற்கை இல்லை என்று அந்த நாட்டின் பிரதமர் கிரியகோஸ் மிட்சோடகிஸ் தெரிவித்தார். அத்துடன், பல தசாப்தங்களில் இல்லாதவாறு மிகப் பெரும் சுற்றுச்சூழல் பேரழிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிரீஸில் வரலாறு காணாத வகையில் சமீபத்திய வாரங்களில் வெப்பநிலை உயர்ந்தது. இதனால் நாட்டில் பல இடங்களில் காட்டுத் தீ பரவல் ஏற்பட்டது.

எங்களால் காட்டுத் தீயில் இருந்து ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. ஆனால், நாங்கள் காடுகளையும் சொத்துக்களையும் இழந்துவிட்டோம் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய காட்டுத் தீ தகவல் அமைப்பின் தரவுகளின் பிரகாரம் சுமார் ஒரு இலட்சம் ஹெக்ரெயர் வனப்பகுதி மற்றும் விவசாய நிலங்கள் கடந்த இரண்டு வாரங்களுக்குள் தீயில் எரிந்து கருகிவிட்டன.

இதேவேளை, அனைத்து காட்டு தீயின் பின்னாலும் நிச்சயமாக இயற்கை இல்லை என்று பிரதமர் உறுதி படக் கூறினார்.

காடுகளுக்குத் தீ வைத்ததாகச் சந்தேகிக்கப்படும் பலர் கடந்த சில நாட்களில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். கடந்த பத்து நாட்களில் கிரீஸ் முழுவதும் கிட்டத்தட்ட 600 தீ விபத்துகள் பதிவாகியுள்ளன. (ஐ)

# ஆப்கானில் கட்டாய திருமணத்துக்கு பெண்களை வற்புறுத்தும் தலிபான்!

காபூல், ஓக. 14

ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து வரும் தலிபான்கள் பெண்களை தங்கள் வசமாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். இது தொடர்பில் வெளிப்படையான அச்சுறுத்தலை அவர்கள் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

"உங்கள் இளம் மகள்களை எங்கள் வீரர்களுக்கு மனைவியாக்குங்கள்", என்று அவர்கள் மிரட்டி வருகின்றனர் என்று அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எங்களின் வெற்றி குறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என்று தலிபான்கள் அறிவித்த போதிலும், அவர்களிடம் சரணடைந்த இராணுவத்தினர், பொலிஸாரை ஈவிரக்கமின்றி அவர்கள் கொல்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இதனிடையே 30 நாட்களில் தலைநகர் காபூலை தலிபான்கள் தனிமைப்படுத்தி விடுவார்கள். 90 நாட்களில் ஒட்டுமொத்த காபூலையும் அவர்கள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடுவார்கள் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதேவேளை, தலிபான்கள், அரசாங்கத்தை சமரசம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள கட்டார் ஊடாக "ஆட்சியில் பங்கு அளிப்பதாகவும் போரை கைவிடுமாறும்", கோரப்பட்டது. ஆனால், தலிபான்கள் இதற்கு செவிசாய்க்கவில்லை.



இதனிடையே இந்தப் போரில், போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள், மனிதகுல விரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று சர்வதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஐ)



# சீனாவில் வெள்ளம் 21 பேர் உயிரிழப்பு!

பீஜிங், ஓக. 14

சீனாவின் மத்திய மாகாணமான ஹூபேயில் தொடரும் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் 5 நகரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் சிக்கி 21 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், இந்தப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மாகாணத்தின் வடக்கில் சுய்ஜோ நகரின் ஒரு பகுதியான லியுலின் நகரத்தில் அதிக உயிரிழப்புக்கள் பதிவாகின. மாகாணத்தில் சில இடங்களில் 400 மில்லி மீற்றர் மழை பெய்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் கடைகள் சேதமடைந்தன. மின்சாரம், போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்புகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக சீன அரச ஊடகமான சின்ஹூவா தெரிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் தென்மேற்கு மாகாணமான சிச்சுவானில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சுமார் 80,000 பேர் இடம்பெயர்ந்தனர். கடந்த மாதம் ஹெனானில் பதிவான மழை - வெள்ளத்தால் 300இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து சூட்டு சம்பவத்தில் சிறுமி உட்பட ஐவர் உயிரிழப்பு!

## தாக்குதலாளியும் சடலமாக மீட்பு

லண்டன், ஓக. 14

இங்கிலாந்தின் பிளைமவுத் பகுதியில் 23 வயதான இளைஞர் ஒருவர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஐவர் உயிரிழந்தனர். இவர்களில் பத்து வயதான சிறுமி, மற்றும் இரண்டு பெண்களும் அடங்குவர். தாக்குதலாளியின் உடலும் சூட்டுக் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட துப்பாக்கியுடன் காணப்பட்ட இளைஞன் தனது குடும்பத்தவர்களையும் எதிர்ப்பட்டவர்களையும் கண்டபடி சுட்டுள்ளார் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

பாரம் தூக்கும் வாகனம் ஒன்றின் சாரதி எனக் கூறப்படும் அந்த இளைஞன், முதலில் வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்தவர்களைச் சுட்டுவிட்டு வெளியே வந்து வழிப்போக்கர்களையும் தாக்கியுள்ளார்.

காயமடைந்த சிலர் அம்புலன்ஸ் ஹெலி மூலம் மீட்கப்பட்டனர். நேற்றிரவு பொலிஸார் சம்பவம் நடந்த பகுதியை மூடித் தேடுதல்களை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் ஒரு பயங்கரவாத தாக்குதல் அல்ல என்று மறுத்துள்ள அதிகாரிகள், பிரதேச மக்களை அமைதி பேணுமாறு கேட்டுள்ளனர். தனது அதிர்ச்சியை வெளியிட்டிருக்கின்ற உள்துறை அமைச்சர் ப்ரிதி பட்டேல் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற மிக மோசமான சூட்டுச் சம்பவம் இதுவாகும். (ஐ)

# ஐஸ்கிறீம் வாங்குவதற்காக நகரில் தரைறங்கிய ஹெலி!

ரொறன்ரோ, ஓக. 14

ஐஸ்கிறீம் வாங்குவதற்காக நகரின் மத்தியில் திடீரென ஹெலிகொப்டரை தரையிறக்கிய விமானிக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

கனடாவின் டிஸ்டேல் நகரில் நேற்று முன்தினம் திடீரென ஹெலிகொப்டர் ஒன்று தரையிறங்கியது. மருத்துவ அம்புலன்ஸ் வர்ணம் பூசப்பட்ட அந்த ஹெலிகொப்டர் திடீரென தரையிங்கியதால் மக்கள் பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் விமானி ஐஸ்கிறீம் சாப்பிட விரும்பி அதனை வாங்குவதற்காக முன்னறிவிப்பின்றி ஹெலிகொப்டரை தரையிறக்கியமை தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து விமானிமீது வழக்கு பதிந்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க உத்தரவிட்டனர். (ஐ)

# துருக்கியை தாக்கும் இயற்கை ; திடீர் வெள்ளத்தால் 17 பேர் பலி

இஸ்தான்புல், ஓக. 14

துருக்கியின் கருங்கடல் பிராந்தியத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

இந்த மாத ஆரம்பத்தில் காட்டு தீ பேரழிவை ஏற்படுத்திய நிலையில், மற்றோர் இயற்கை பேரிடராக இந்தப் பெருவெள்ளம் அமைந்துள்ளது.

பெரு வெள்ளத்தால் பெரும் பாலான வீதிகள் மூழ்கின. வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட குப்பைகள் தெருக்களில் குவிந்துள்ளன. பல பாலங்கள் மற்றும் வீதிகள் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

கடந்த இரு வாரங்களாக துருக்கியில் பற்றியெரிந்த காட்டுத் தீயால் 8 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையிலேயே வெள்ளத்தால் மற்றொரு அழிவு ஏற்பட்டுள்ளது. கஸ்டமோனு மாகாணத்தில் மட்டும் வெள்ளத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். சினோப்பில் இரண்டு பேர் இறந்தனர். வெள்ளத்தில் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுவதால் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 1,400இற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். மோசமான இடங்களில் சிக்கியிருந்த சிலர் ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகளின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர். (ஐ)



# கந்தஹார் நகரமும் தலிபான்கள் வசம்!

காபூல், ஓக. 14

ஆப்கானிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரமான கந்தஹாரும் தலிபான்கள் வசமானது. இதன்மூலம் தற்போது தலிபான்கள் கட்டுப்பாட்டில் 12 மாகாணங்களின் தலைநகரங்கள் உள்ளன.

தலிபான்கள் கடந்த புதன்கிழமை ஹிரத் நகரை கைப்பற்றினர். அங்குள்ள மிகப் பழமையானதும் மிகப்பெரியதுமான பள்ளிவாசலையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இது கிறிஸ்து பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தற்போது ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதி கிட்டத்தட்ட முழுமையாக தலிபான்கள் வசமாகிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராகுல் அபார சதம் இந்தியா 346/7

லண்டன், ஓக. 14

இந்திய அணியின் தொடக்க வீரர்களில் ஒருவரான கே. எல். ராகுல் சதம் அடித்து அசத்திய போதும் நடுவரிசை வீரர்கள் துடுப்பாட்டத்தில் சொதப்பியதால் 346 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ரோஹித் சர்மா, கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான அடித்தளத்தை ஏற்படுத்தினர். இணைப்பாட்டமாக அவர்கள் 100 ஓட்டங்களை கடந்த போது, லோர்ட்ஸ் மைதானத்தில் 69 ஆண்டுகளின் பின்னர் சதம் கடந்த முதல் இந்திய இணை சாதனையை அவர்கள் படைத்தனர்.

145 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 83 ஓட்டங்களைக் குவித்த ரோஹித் சர்மா அண்டர்சனின் பந்தில் "போல்ட்" ஆனார். அடுத்து வந்த புஜாரா 9 ஓட்டங்களுடன் அண்டர்சனின் பந்தில் வீழ்ந்தார். மறுமுனையில் தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கே.எல். ராகுலுடன் இணைந்தார் அணித் தலைவர்




விராட் கோலி.

இருவரும் இணைப்பாட்டத்தை தொடர்ந்தனர். கோலி மறுமுனையில் மிகநிதானம் காட்டவே, 212 பந்துகளை சந்தித்த ராகுல் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் தனது 6ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார் ராகுல்.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இந்த இணை 117 ஓட்டங்களைப் பெற்றது. 103 பந்துகளை சந்தித்து 42 ஓட்டங்களை எடுத்த கோலி 42 ஓட்டங்களுடன் ரொபின்சனின் பந்தில் ரூட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து 250 பந்துகளை சந்தித்து 12 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 129 ஓட்டங்களை எடுத்த ராகுலும் ரொபின்சனின் பந்தில் ஆட்டமிழந் தார்.

பின்னர் வந்த ரஹானே ஆட்டத்தில் சொதப்பி னார். 23 பந்துகளை சந்தித்து ஓர் ஓட்டத்தை மட்டுமே எடுத்தநிலையில் அவர் ஆட்டமிழந்தார்.

ரிஷப் பந்த் தனது வழக்கமான பாணியில் வேகமாகத் துடுப்பெடுத்தாடினார். 5 பௌண்ட்ரிகளை அடித்த அவர் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முஹமட் ஷமி ஓட்டம் எதனையும் பெறாமல் பெவிலியன் திரும்பினார்.

இதனால், நேற்று மதிய போசனத்திற்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இந்தியா 116 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 346 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் அண்டர்சன் 3, ரொபின் சன் 2 விக்கெட்களை கைப்பற்றியிருந்தனர்.



# ரோஜர்ஸ் கிண்ணம் அசரென்கா வெற்றி!

ரொறன்ரோ, ஓக. 14

மரியா சக்காரி - விக்ரோறியா அசரென்கா கடுமையாக மோதிய போட்டியில் அசரென்கா வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கனடாவின் ரொறன்ரோ நகரில் ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் போட்டி நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டம் பிரபல வீராங்கனைகளான கிரீஸின் மரியா சக்காரி, விக்ரோறியா அசரென்கா ஆகியோர் மோதினர்.

மூன்று சுற்றுக்கள் நீடித்த இந்தப் போட்டியில் முதல் சுற்றில் 6 -4 என்ற கணக்கில் அசரென்கா வெற்றி பெற்றார். இரண்டாவது செற்றை 6 - 3 என்ற கணக்கில் சக்காரி வென்றார்.

வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றில் 7 - 6 (7 - 2) என்ற செற் கணக்கில் அசரென்கா வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல, மற்றொரு முன்னணி வீராங்கனையான சபலென்கா கனடாவின் மரினோவை 6 -1, 6-3 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றார். (ஐ)

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட்: 217இற்கு சுருண்டது பாகிஸ்தான்




கிங்ஸ்ரன், ஓக. 14

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்றுள்ள பாகிஸ்தான் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தற்போது விளையாடுகின்றது.

முதல் போட்டி நேற்று இலங்கை நேரப்படி அதி காலை நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்க வீரர்கள் சோபிக்கவில்லை. இம்ரான் பட்11, அபிட் அலி 9, அஷார் அலி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் நடுவரிசை வீரர்கள் ஓரளவு தாக்குப் பிடித்தனர். அணித்தலைவர் பாபர் அஸாம் 30, பாவட் ஆலம் 56 ஓட்டங்களை எடுத்தார். இவரே பாகிஸ்தான் சார்பில் அதிக ஓட்டங்களை குவித்திருந்தார். தொடர்ந்து முஹமட் ரிஸ்வான் 23, பஹீம் அஸ்ரப் 44 ஓட்டங்களை எடுத்தனர்.

பின்வரிசை வீரர்கள் வேகமாக ஆட்டமிழக்கவே, 70.3 ஓவர்களில் 217 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ஜெய்டன் சீல்ஸ், ஜசொன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், கெமர் ரோச் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு தொடக்கம் கொடுத்த வர்களில் ஒருவரான கிரன் பாவலும், அடுத்து வந்த பொன்னரும் ஓட் டம் எதையும் எடுக்காமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை இழந்து 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பாகிஸ்தான் சார்பில் பந்து வீசிய முஹமட் அப்பாஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினார். (ஐ)



# ஆஸி. தலைவருக்கு சத்திர சிகிச்சை

சிட்னி, ஓக. 14

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் அரோன் பின்ஞ்சுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், அவர் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அவுஸ்திரேலிய ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைவரான அரோன் பின்ஞ், மேற்கிந்தியத்தீவுகளில் விளையாடியபோது முழங்காலில் காயமடைந்தார்.

அவுஸ்திரேலியா திரும்பிய அவருக்கு இரு வார கால தனிமைப்படுத்தலின் பின்னர் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதிலிருந்து மீள 8 - 10 வாரங்கள் தேவை என்று கருதப்படுகின்றது. இதனால், அவர் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் விளையாடுவார் என்று அவுஸ்திரேலியா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷிடம் இருபது - 20 தொடரை 4 -1 என்ற கணக்கில் மோசமாக தோற்றது அவுஸ்திரேலிய அணி. உலகக் கிண்ணத்தில் பின்ஞ் விளையாடாவிடின் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

# அரசின் கால வீணடிப்பால் மாணவர் கல்வியே பாதிப்பு

## அதிபர்கள் சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.14

**“சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்து 32 நாட்கள் நிறைவடைந்துள்ளன. எனினும், இதுவரை இந்தப் பிரச்னைக்குத் தீர்வு இல்லை. அரசின் கால வீணடிப்புகளால் மாணவர்களின் கல்வியே பாதிப் படைந்துள்ளது.”**

- இவ்வாறு இலங்கை அதிபர்கள் சங்கத்தின் தலைவர் பராக்கிரம வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வரலாறு முழுவதும் இவ்வாறான செயல்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னைக்குப் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படும். அந்த யோசனைகள் கால தாமதப்படுத்தப்படும். தற்போதைய அரசிலும் இவ் வாறான ஒரு போக்கே காணப்படுகின்றது.

சுபோதினி அறிக்கையையே சமர்ப்பித்ததாக அரசுக்குச் சார்பான தொழிற்சங்கம் ஒன்று கூறுகின்றது. அந்தச் சுபோதினி அறிக்கையை எமது சகல தொழிற்சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே, இதனைச் செயல்படுத்துவதற்காகத் தொடர்ந்து ஆணைக்குழுக்களை அமைத்துக் காலம் தாழ்த்துவது காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இந்தக் கால வீணடிப்புகளால் மாணவர்களின் கல்வியே பாதிப்படைந்துள்ளது. மாணவர்களின் கல்வியில் அக்கறையிருப்பின் அரசானது காலத்தை வீணடிக்காது நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள இந்த அறிக்கையைச் செயல்படுத்த வேண்டும்.

இதனைச் செயபடுத்துவதற்கு வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்வரை இருக்க வேண்டுமெனில் அதற்கு முன்பாக எம்முடன் இணக்கப்பாட்டுக்கு வருமாறு அரசுக்கு அழைப்பு விடுக்கின்றோம்” - என்றார். (இ)

# ரிஷாத்தை விடுவிக்கக்கோரி ஒரு இலட்சம் கையொப்பங்கள்!

கிண்ணியா, ஓக. 14

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யக்கோரி ஒரு இலட்சம் கையொப்பங்கள் திரட்டப்படுகின்றன. நேற்று காலை கிண்ணியாவில் ஜும்ஆ தொழுகை பின் மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது.

இந்தக் கையொப்பம் திரட்டும் பணி அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதியினரால் முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் கையொப்பங்களை மக்களிடமிருந்து பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதிக்கு அனுப்பும் நோக்கிலேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிரசன்ன ரணவீரவுக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 14

பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று றுதியாகியுள்ளது.

இதனையடுத்து, அவர் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னைக்கு

# அமைச்சரவை உபகுழுவை தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு




கொழும்பு, ஓக. 14

“அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக அரசு அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்துள்ளது. அமைச்சரவை உபகுழுவைத் தவிர மாற்று வழிகள் எவையும் இல்லை.”

- இவ்வாறு இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாம் கடந்த 5ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலாளர் பீ.பீ.ஜெயசுந்தர தெரிவித்திருந்தார்.

இரண்டு வாரங்களில் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதாகவும் அவர் கூறினார். அந்த ஆணைக்குழு இருக்கின்றதா? இல்லையா? என்று கேட்கின்றோம்.

அந்த ஆணைக்குழு இல்லையாயின் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை தொடர்பில் ஆராய்வதற்காக இருக்கும் ஒரு குழு இந்த அமைச்சரவை உப குழுதான்.

சுமார் 2 இலட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்கள் தெளிவான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம் இன்று (நேற்று) 32ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்தக் குழுவினூடாக எதிர்வரும் திங்கட்கிழமை அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதாக அமைச்சரவை உபகுழுவை நியமிக்கும்போது ஊடகங்கள் வாயிலாக அரச தரப்பினர் எமக்குத் தெரிவித்தனர்.

சகல தொழிற்சங்கங்களையும் வெவ்வேறாக சந்தித்து ஒரு தீர்மானத்தை எடுப்பதாகக் குறித்த உபகுழு நேற்று (நேற்று முன்தினம்) கூறியிருந்தது. இந்த நீண்டகால செயல்பாடு அவசியமா எனக் கேள்வி கேட்க விளைகின்றேன்.

சுபோதினி குழு அறிக்கையை செயற்படுத்துவதுடன் அதிபர், ஆசிரியர் சேவையை நிறைவு சேவையாக செயற்படுத்துவதே எமது கோரிக்கை.

இது தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சரவைப் பத்திரம் காணப்படுகின்றது. கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் உள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் செயற்படுத்தவதற்குப் பதிலாகவே அமைச்சரவை உபகுழுவை நியமித்துள்ளனர். எனவே, இதனைக் காலம் தாழ்த்தும் செயற்பாடாக மாற்றுவதற்கு முயற்சித்தால் பாரிய பிரச்னையாகவே இதனைக் கருத வேண்டி வரும்” - என்றார். (இ)

# விபத்துக்களில் ஒரே நாளில் ஐவர் மரணம் 50 பேர் காயம்



கொழும்பு, ஓக. 14

நாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்தனர் எனவும், 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“யாழ்ப்பாணத்தில் அதிக வேகத்துடன் பயணித்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 22 பேர் காயமடைந்துள்ளனர். கேகாலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பொல்கஹவெல பகுதியில் 5 டிப்பர் வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்ட விபத்தில் பௌத்த பிக்கு ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

ஏனைய இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களின்போது 4 பேர் உயிரிழந்ததுடன் 21 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

பல விபத்துக்கள் இடம்பெறுவதன் காரணமாக எந்தத் தருணத்திலும் வீதிப்பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று பொது மக்களிடம் கோரிக்கை விடுகின்றோம்” - என்றார். (இ)

# தாயை இழந்த வேதனையில் சிறுமி தூக்கிட்டு தற்கொலை

## கொக்கட்டிச்சோலையில் சோகம்

மட்டக்களப்பு, ஓக. 14

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா, சில்லிக்குடியாறு கிராமத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் தனது தாயை இழந்த வேதனையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது எனக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில்லிக்குடியாறு கிராமத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த சிறுமியின் தாயார் மரணமடைந்தார் எனவும், தனது தாயை இழந்த சிறுமி தான் தற்கொலை செய்யப்போவதாக நீண்ட நாட்களாக கூறிவந்த நிலையில் அவர் தனது வீட்டு அறையினுள் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்ப இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் முன்னெடுத்துள் ளனர். (இ)

# கம்பஹாவில் 24 மணிநேரத்தில் 1,676 தொற்றாளர் அடையாளம்!

கொழும்பு, ஓக. 14

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 1,676 தொற்றாளர்கள் கடந்த 24 மணிநேரத்தில் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

மாவட்டத்தின் 15 சுகாதாரப் பிரிவுகளிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக பியகம பொதுசுகாதார பிரிவில் 218 தொற்றாளர்களும், மஹர பிரிவில் 195 தொற்றாளர்களும், மீரிகம பிரிவில் 147 தொற்றாளர்களும், அத்தனகல்ல பிரிவில் 130 தொற்றாளர்களும், திவுலப்பிட்டிய மற்றும் வத்தளை ஆகிய பிரிவுகளில் 121 தொற்றாளர்களும், தொம்பே பிரிவில் 110 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கட்டான பிரிவில் 102 தொற்றாளர்களும், ஜா - எல பிரிவில் 95 தொற்றாளர்களும், களனிப் பிரிவில் 94 தொற்றாளர்களும், மினுவாங்கொட பிரிவில் 90 தொற்றாளர்களும், நீர்கொழும்பு பிரிவில் 89 தொற்றாளர்களும், சீதுவ பிரிவில் 84 தொற்றாளர்களும், கம்பஹா பிரிவில் 30 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலை கொத்தணி தொற்றாளர்கள் 83 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க வலயத்தில் 72 தொற்றாளர்களும், பியகம வலயத்தில் 11 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். (இ)

## வல்லிபுர ஆழ்வார்...

இந்த கூட்டத்தின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன,

இவ்வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி இல்லை.

பூசைகள் பக்தர்கள் பங்குபற்றுதல் இன்றி நடைபெறும். சுகாதார அமைச்சின் சுற்றிக்கையின் பிரகாரம் மதத்தலைவர்கள் உட்பட 100 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஆலய உள்வீதியில் மட்டுமே பூசைகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெளிப்புறச் சூழலில் எந்தவிதமான சமய நிகழ்வுகள் கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்தி கடன் நிறைவேற்றுதல் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் விசேட தனியார், அரச போக்குவரத்து சேவை இடம் பெறுவதற்கு அனுமதி இல்லை.

ஆலய சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படிவைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவுகின்ற கோவிட் 19 அசாதாரண சூழ்நிலையில் அங்கபிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூர சட்டி எடுத்தல், காவடி, தூக்கு காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப் பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இவ்வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை ஆலய வளாகத்திலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடல் மற்றும் ஆலயத்தை அண்டிய பகுதியில் அடியார்கள் மற்றும் பொது மக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலைநிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஆலய சூழலில் இயங்கி வந்த இரண்டு கடைகள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் இயங்கி வரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

ஆலயச் சூழலிலுள்ள வெற்று காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது. ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்து பாதைகள் தடைப்படுத்தப்படும் போது பிரயாணிகள் மாற்றுவழி பாதையினை பிரயோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அத்துடன் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியினால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பூசைகாலங்களில் ஆலய சுற்றாடல்களில் இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய பக்த அடியார்கள் தங்கள் வீடுகளில் இருந்து மாயவனை வணங்கி அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (அ-02,03)

## யாழ்ப்பாணத்தில்...

சாலை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனைகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வகத்தில் 158 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 33 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதன்படி, யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேரும், வேலணை மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வகத்தில் 650 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 64 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 14 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 4 பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் இருவருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் இருவருக்கும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குமாக 31 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில், வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், வவுனியா வடக்கு மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், புளிங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒருவருக்குமென 23 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேபோன்று, மன்னார் பொது மருத்துவமனையில் 6 பேருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## 3,142 பேருக்கு...

ளது. இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 48 ஆயிரத்து 260ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 173 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 628 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

## இலங்கையை...

பதிவாகலாம் என்ற அச்சுறுத்தல் உள்ளது. இது எண்ணிக்கையில் அல்ல, வீதத் தில் கணிக்கப்பட வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி இந்தியாவை விட நான்கு மடங்கு வீதத்தால் கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ளன.

அடுத்த மூன்று நான்கு வாரங்களில் இது மேலும் அதிகரிக்கும். எனவே, உடனடியாக நாட்டை முடக்கும் தீர்மானம் எடுத்து மரண எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் தரவுகளுக்கு அமைய, நாளாந்தம் 600 மரணங்கள் பதிவாகலாம். ஆனால், மாற்றங்களை முன்னெடுத்தால் மரணங்களைக் குறைக்க முடியும்.

எவ்வாறாயினும் நாளாந்தம் 150 மரணங்கள் பதிவாவதைத் தடுக்க முடியாது. இதனைவிட அதிகரிக்க இடமளிக்கக்கூடாது என்பதையே நாம் கூறுகின்றோம்.

இதனால் நாட்டை முடக்கினாலும் அடுத்த இரண்டு வாரங்களின் பின்னரே நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும்" - என்றார். (இ)

# கொரோனா தொற்றால் யாழில் ஐவர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், ஓக. 14*

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் 5 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதடியைச் சேர்ந்த 78 வயது பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இதேபோன்று, கொழும்புத்துறையைச் சேர்ந்த 79 வயது நபர் ஒருவரும், புத்தூரைச் சேர்ந்த 75 வயது ஆண், ஏழாலை - மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 69 வயது ஆண், கோண்டாவிலைச் சேர்ந்த 48 வயது நபர் ஒருவருமாக ஐவர் உயிரிழந்தனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 176ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

# கல்முனையில் 12 தொற்றாளர்கள்

*கல்முனை, ஓக. 14*

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பெரிய நீலாவணையில் சுனாமியால் பாதிக்கப்பட்டமக்கள் மீளக்குடியேறி வசித்து வரும் ரெட்குரோஸ் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கும் 19 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 5 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரியநீலாவணையில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலையில் இதுவரை 35 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இன்று பாண்டிருப்பு மாரியம்மன் வீதியில் 21 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 7 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ)

## பிரான்ஸ்...

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் கொல்லப்பட்ட இவ்விருவரது உடல்களும், பிரேத பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. தடயங்களைக் கண்டுபிடிப்பதில் தடயவியல் துறையினர் ஈடுபட்டுவருகின்றார்கள்.

கொலையுண்டவர்கள் யாழ்ப்பாணம், உரும்பிராயைச் சேர்ந்த இராஜதுரை விஜயசிறி (51), இராஜதுரை டிலக்ஷனா (21) என அடையாளங்காணப்பட்டுள்ளனர். செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில் இருவரது சடலங்களும் அவர்களுடைய வீட்டில் இரத்த வெள்ளத்தில் மீட்கப்பட்டன.

இவர்களுடைய கொலை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவரும் அதேவேளையில், கொல்லப்பட்ட பெண்ணின் கணவர் இராஜதுரையும், அவரது இரு புதல்வர்களும் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## நாடு முடக்கப்படாது...

அதற்கமைய நேற்று நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கிடையேயான அனைத்துப் பொதுப்போக்குவரத்துச் சேவைகளும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதியுடன், பொது இடங்களுக்குப் பிரவேசிக்கும்போது, கொரோனாத் தடுப்பூசி அட்டையை பரிசோதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போது அமுலில் உள்ள சுகாதார வழிகாட்டல்கள், மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுகாதாரம், துறைமுகம், விமான நிலையம் உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்கள், விவசாயத்துறை மற்றும் முதலீட்டு சபையால் அனுமதி வழங்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் ஆகியோருக்கு மாத்திரம் மாகாணங்களுக்கிடையில் பயணிக்க அனுமதி உள்ளது.

அத்துடன், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களைச் சேவைக்கு அழைக்கும் போது, அவசியத்தன்மை கருதி, குறித்த மாகாணத்துக்கு வெளியே வசிக்கும் ஊழியர்களை அழைப்பதற்கான அதிகாரம் நிறுவனப் பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தக நிலையங்களில், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய, பணியிடத்தின் இடப்பரப்பைக் கவனத்திற்கொண்டு பணிக்குழாமினரை சேவைக்கு அழைக்க முடியும்" - என்றார். (இ)

## கொரோனா...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஆண்கள் 85 பேர் மற்றும் பெண்கள் 70 பேர் நேற்று முன்தினம் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தனர்.

60 வயதுக்கு மேற்பட்ட 111 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 5775 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த புதன்கிழமை நாட்டில் 156 கொரோனா மரணங்கள் பதிவாகின.

நாட்டில் கொரோனா மரணங்கள் அதிகரிப்பதைத் தடுக்க உடனடியாக நாட்டை முடக்குமாறு சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தி வருகின்றபோதும் அரசாங்கம் அதனை ஏற்க மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை...

வும் உடனடியாக நாட்டை மூடி வைப்பதை தவிர நாட்டு மக்களை வாழ வைக்க வேறு வழி இல்லை" என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம தெம்பரவெவ கெமுனுபுர ஸ்ரீவிக்ருத்தாராம விகாரையின் ஸ்ரீமத் ரணசிங்க பிரேமதாஸ பிரிவெனவின் பொறுப்பாளர் சாலியபுர சுதர்ஷன தேரரை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சந்தித்து ஆசி பெற்றதுடன் முக்கிய விடயங்கள் சில குறித்து கலந்துரையாடினார்.

அதன்பின்னர், "நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைக்கு மத்தியில் அரசாங்கம் தீர்மானம் எடுக்க வேண்டிது நாட்டின் பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற இரண்டு குறித்து எனவும் உடனடியாக நாட்டை மூடி வைப்பதை தவிர நாட்டு மக்களை வாழ வைக்க வேறு வழி இல்லை" என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"இந்த அழிவில் இருந்து உயிர்களை பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பு எனவும் அதன் பின்னர் பொருளாதாரம் குறித்து சிந்திக்க முடியும். மூன்றாவது தடுப்பூசியை விரைவில் தருவிக்க வேண்டும். இதுவரையில் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் அதனை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்" எனவும் வலியுறுத்தினார்.

ஈழநாடு
Eelanadu



## மக்கள் சுய கட்டுப்பாட்டில் இருப்பதால் வெறிச்சோடும் கொழும்பு நகர வீதிகள்

*கொழும்பு, ஓக. 14*

*இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் மக்கள் சுய கட்டுப்பாட்டுடன் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்க ஆரம்பித்துள்ளனர்.*

*இதனால் நேற்று கொழும்பு நகரில் பிரதான வீதிகள் மக்கள் நடமாட்டம் குறைவடைந்து வாகனங்கள் இன்றி வெறிச்சோடி போயுள்ளமையை அவதானிக்க முடிந்தது.*

*அரசு நாட்டில் முடக்கத்தை அறிவிக்கின்றதோ? இல்லையோ? மக்கள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடுகளை விதித்து நடமாட்டங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது என்று சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், மக்கள் சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட ஆரம்பித்துள்ளனர் என்பதனைக் கொழும்பு நகர வீதியின் நேற்றைய நிலைமை காட்டியது.*

*எப்போதும் கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, மருதானை, புறக்கோட்டை, பொரளை உள்ளிட்ட பிரதேசங்களில் வீதிகளில் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் மக்கள் நடமாட்டமும் அதிகமாக இருக்கும். ஆனால், நேற்று மிகக் குறைந்தளவான வாகனங்களே வீதியில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது. (இ)*

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில்

## ஊழியர்களின் கடமைக்கு இடையூறு; பி. எச். ஐ. ஒருவர்மீது முறைப்பாடு!

*யாழ்ப்பாணம், ஓக. 14*

*ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் ஊழியர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார், கொரோனா தொற்று பரவும் சூழலை ஏற்படுத்தினார் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு எதிராக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகராலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் தனது முறைப்பாட்டுக் கடிதத்தில்,*

*12.08.2021 அன்று தமது மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவரை தீவிர தன்மை குறைந்த தொற்றாளர் என்ற அடிப்படையில் நாவற்குழி இடைத்தங்கல் முகாமுக்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து அல்லைப்பிட்டி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் என்று தன்னை அறிமுகப்படுத்தியவர் சீருடை இன்றி மருத்துவமனைக்குள் பிரவேசித்து நோயாளர் அவசர சிகிச்சைப் பிரிவல் பலமுறை நுழைந்து அந்த நோயாளியை இடைத்தங்கல் முகாமுக்கு மாற்ற வேண்டாம் என்று கூறியுள்ளார்.*

*மருத்துவர்கள் நோயின் நிலையையும், சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம் பற்றிய அறிவுறுத்தல் வழங்கியும் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தும் விதத்தில் அவர் நடந்து கொண்டார். அத்துடன், பலமுறை வைத்தியசாலை சிற்றூழியர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார். அவர் தன்னுடன் நோயாளியின் மகனை - முதலாம்தர தொற்று தொடர்பாளரையும் அழைத்து வந்து தொற்று பரவும் சூழலை ஏற்படுத்தினார்.*

*இந்த சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், கொரோனா பரவல் தன்மையை கட்டுப்படுத்த உதவுவதுடன், மருத்துவமனை ஊழியர்கள் பணிபுரிவதற்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார். (ஐ)*

# 60 வயதுக்கு மேற்பட்டோர் தொடர்பில் விசேட கவனம் உடன் செலுத்துங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

*கொழும்பு, ஓக. 14*

*நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*கடந்த சில நாட்களில் இடம்பெற்ற மரணங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி, உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களில் அதிக சதவீதத்தினர் 60 வயதுக்கு மேற்பட்ட, தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*எனவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குறித்துக் கவனம் செலுத்தி, விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.*

*ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற, கொரோனா ஒழிப்பு விசேட குழுவுடனான சந்திப்பின்போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.*

*பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளைச் செய்யும் போது, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.*

*சிறுநீரக மாற்று அல்லது இரத்தச் சுத்திகரிப்புக்கு உள்ளான நோயாளிகளைத் தனிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.*

*தொற்றா நோய்களுக்கான சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளின் விவரங்களைப் பெற்று, சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் விசேட கவனத்துக்குக் கொண்டு வருவது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.*

*மேல் மாகாணத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட, ஆனால் பல்வேறு நோய்கள் காரணமாக இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடுத்த சில நாட்களில் அவர்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்புப் பணிக்குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.*

*ஒரு தடுப்பூசியைப் பெற்றிருப்பது, நோயிலிருந்து பாதுகாப்புப் பெற போதுமானதல்ல. எனவே, தடுப்பூசியின் இரண்டு மாத்திரைகளையும் பெற்று, நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பு காலம் வரும் வரை பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று கொரோனாத் தடுப்புக் குழு உறுப்பினர்களான விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.*

*மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பது, விசேட தேவைகள் மற்றும் கடமைகளுக்காக அழைக்கப்படாத அனைவரையும் வீட்டில் வைத்திருப்பது மற்றும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி நோய் பரவுவதைத் தடுக்க உதவுவது, பொதுமக்களின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்று மருத்துவர்கள் வலியுறுத்தினர். (இ)*




## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 07 . 1946



உதிர்வு 13 . 07 . 2021

### அரியகுட்டி இராசரத்தினம் (கோவாலி)

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், நவக்கிரி, சுவிஸ் Basel ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி இராசரத்தினம் நேற்று (13.08.2021) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி – செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனியர் – காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரேவதியின் அன்புக் கணவரும், வனிதா (கனடா), காலஞ்சென்ற சிவசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சண்முகநாதன், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான கனகம்மா, அன்னலிங்கம் மற்றும் அன்னராசா, நல்லம்மா (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குகநேசன்(கனடா), ஞானமணி, மலர்விழி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாகரன், அம்பிகாகரன், பாஸ்கரன், சத்தியதேவி, கவிதா(கனடா), சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தப்பாவும், கயேந்தினி, சிந்துயா ஆகியோரின் பெரியப்பாவும்,சுகன், சாருனி(கனடா), பர்மிளா, கிருத்திகன், மதுமிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**நேசன் - மருமகன்**
**Mobile : +14168177704**

தகவல்
**குடும்பத்தினர்.**

அன்னை மடியில் 08 . 10 . 1933



ஆண்டவன் அடியில் 06 . 07 . 2021

*என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே*
*என் மரணத்தின் பின்பும் என்னை மறவாதீர்*

### சாமுவேல் ஆசீர்வாதம் (றொம், செல்வம்)

ரெம்பிள் றோட்டைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சாமுவேல் ஆசீர்வாதம் கடந்த (06.08.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றொம் சாமுவேல் – எலிசபெத் (சின்னம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற றெஜினா ராணியின் அன்புக் கணவரும், சறோஜா, ஆம்ஸ்ரோங் (ஆனந்தகுமார்), செல்லக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (குனம்), றீற்றம்மா (ராசாத்தி), காலஞ்சென்றவர்களான அலோசியஸ் (நவம்), சென் ஜோன் (துரை), இராஜப்பு (அரசு) மற்றும் பிரான்சிஸ் சேவியர்(செபம்), ஆரோக்கியநாதர் (விஜயன்), லூர்தம்மா (அன்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயானந்தன் (ஜெயா), டெல்பீன், லக்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், யூட், டேமியன், ஜெசன், லியா, தேயோ, றொஸ்சினி, றொஸ்சிகா, றொகஸ்சாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 14 Aug 2021 3:00 PM - 6:00 PM
Monday, 16 Aug 2021 9:00 AM - 10:00 AM
Shanti Funeral Services 184 Pinner Rd, Harrow HA1 4JP, United Kingdom

**திருப்பலி**
Monday, 16 Aug 2021 11:00 AM
St Joseph’s Catholic Church 191 High St, Harrow HA3 5EE, United Kingdom

**நல்லடக்கம்**
Monday, 16 Aug 2021 12:30 PM
Carpenders Park Lawn Cemetery Oxhey Ln, Watford WD19 5RL, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**ஆனந்தகுமார் - மகன்**
**Mobile : +33761504530**

தகவல்
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு


**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ஸ்ரார்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை -யாழ் மாநகரசபை உறுப்பினர்களின் அடையாள உண்ணாவிரதப்போராட்டம்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறுாப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு